
மன்னவன் நட்பு
pax.ravichandra@gmail.com
Pax Ravichandra
8-2-2024

மன்னவன் நட்பு

அம்மா நீ வாழ்க






நன்றி சொல்ல வார்த்தைகள்
இலலை தாயே. என் எழுத்தைப்
போற்றும் தெய்வமாய் நீயே

கல்வி கற்கும்போது-கரையில்லா
அலை கடலாய் அன்பைப் பொழிந்தாய்
காலம் மாறிட்ட போதும், தாயும்,
தந்தையுமாய்-அநாதை
என்னை அரவணைத்தாய்

உன் பாராட்டுக்கள் என்னை மகிழ்விக்க
பெற்ற பிள்ளைகளோ சகோதரனாய் என்னை
அணைக்க, அறியாத தந்தையை
அறிந்திட உங்கள் கணவர்




என்ன தவம் நான் செய்தேன் இறைவா
புரியாத தவத்திற்கு-தெய்வமே
நீ தரும் கொடையோ பெரு நிதி
அன்பின் சங்க நிதி



அன்பை விடப் பெறும் பேறு ஏதுமில்லை
அன்னை தந்தையராய் பொழியும்
அன்பில் வாழும் உன் பிள்ளை
இறை அன்பிற்கோ எல்லைகளில்லை

என்றும் நலம் வாழ வாழ்த்துகின்றேன்
எப்போதும் பங்கய முகத்தில் புன்னகை தவழ
சூடிய மலரும், குங்குமமும் எந்நாளும்
நிலைக்க கடவுளை வேண்டும்
உன் பிள்ளை நான் அம்மா

அம்மா நீ வாழ்க



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
(லோக சமஸ்தா சுகினா பவந்து)
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-12-2023

அன்னை பூமி

காற்றும், கடலும், நதியும், மண்ணும்,
விண்ணும் மாசுற- அன்னை பூமியின்
நிலையோ கவலைக்கிடமானது
-புவி வெப்பம் கூடிட-பூமிகா
ஏரிநரகாய் மாறும் நிலைக்கானது.

மழைக்காடுகளை அழித்து,
எண்ணெய்களையும், எரிவாயுக்களையும்
கட்டுப்பாடின்றி எரித்திட- புவி வெப்பம் கூடிடயது
வானம் பொய்த்துப் -பயிர்களும் வாடிடப்
பஞ்சமும், நோய்களும் வந்தன.


புயலும், மழையும், பெருவெள்ளமும் ,
பூகம்பமும் தோன்றிட, உயிரழிவுகள் பெருகின
சுனாமியும் வந்திட-ஊர்களும் கடலில் மூழ்கின.

பசுமை வீட்டு வாயுக்களால்
ஓஸோன் மண்டலத்தில் காயங்கள்
ஊதா கடந்த கதிர்களினால் பூமிக்கும் காய்ச்சல்
பருவங்கள் பொய்த்திட உலகெங்கும் அனர்த்தங்கள்

உலகெங்கும் ஓயாத யுத்தங்கள்
மதவாதம், இனவாதம் உலகை அச்றுத்திட
எங்கும் பயங்கரவாதங்கள்

ஏதேன் தோட்டம் பழங்கதையாகிட
எரிநரகாய் மாறிடும் பூமி-
இறையுருவாய்
தெரியும் சாத்தானின் கொடும்பாவி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-04-2023





அன்பை விட மேலான உறவு
ஏதுமில்லை
அன்னை தந்தை, சகோதரம்,
நண்பர்
இறைவன் தந்த கொடை
தன் மகனை தந்து தம்
அன்பைப் பகிாந்த
இறைவனோ
அன்பே சிவம்–என்பதில்
ஐயமில்லை–

உங்கள் அன்பை என்னோடு
பகிர்ந்த உங்களுக்கு
–நன்றிசொல்ல
வார்த்தைகளில்லை

Pax Ravichandra





I wish you all the joy that you could wish on this beautiful day

ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்

ஓ மதவாதப் பூசாரிகளே!,
வறுமை உலகே-எங்கள் ஏதேன் தோட்டம்,
வாழ்வோ நாளும் போராட்டம்.

கந்தயை உடுத்தி, கிடைத்ததை உண்டு குடித்து
வாழும் நாடோடிகள் நாங்கள்
கடவுள் எம் தந்தை, இயேசு எம் சகோதரர்
என்ற செல்வநிலையோ எம் உள்ளத்தில்.

விண்ணரசும், ஆபிரகாம் மடியும்-மடிந்தபின்
ஏழை எமக்கு சொந்தமென்ற வேதம்-
நீங்கள் சொல்லித் தந்த வேதாகமப் பாடம்

ஏழைகளை அச்சுறுத்த அவியாத -எரி நரகையும்
அழியாத பிரம்மன் எழுத்தாய்- தலை விதியையும்
கண்டு பிடித்த நீங்களோ இறைவனின் குருகுலம்?
அன்பு இறைவனை எள்ளி நகையாடும் பரிகாசம்

குருக்கள் என்றும், ஆயன் என்றும் பட்டங்கள் சூடி
தந்தை என்றும், ஆண்டகை என்றும் நாம் அழைக்க
“பாவிகள்” என்ற பட்டத்தை எமக்கு சூட்டி மகிழ்ந்த
“பரிசுத்தவான்கள்” நீங்கள்.

அனனியாவும், சப்ராவும்-தோல்வியுறும்-உங்கள்
‘‘மதவுடமையே பொதுவுடமைக் கொள்கைக்கு’’
எதிராய்ப் புரட்சிக்கொடி பிடித்தபோது-
மரண தண்டணை உங்கள் நீதி-
மன்னிப்போ சாரமற்ற உப்பான நியதி
அன்பே உருவான இறைவனுக்கு அரக்கனின் முகமூடி

பார்வோனையும் நடு நடுங்க வைத்த மதப்பங்கரவாதம்
உங்கள் வல்லமைக்குச் சான்றானதோ?
கடவுளின் ஏகப் பிரதி நிதிகள் நீங்கள்தான்
அப்பாவிகள் மரணத்தால் உறுதியானதோ?

ஏழைகளின் உழைப்பைச் சுரண்டி
சிந்தனையாளர்களின் பகுத்தறிவைச் சிதைத்து
மதங்களை அழித்து- மதவெறி வளர்த்து
மதம் கொண்ட யானைகளாய் நீங்கள்

பாவி என்று பழிக்கவும்
புனிதன் என்று பட்டமளிக்கவும்
வல்லமை படைத்த குருகுலமே
யார் கொடுத்தார் அதிகாரம்?

பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற
கலிலியோ கலீலீயின் கூற்று
“உங்கள் நம்பிக்கைக்கு முரணானபோது”
வரலாற்றில் உங்கள் “மெய்ஞானம்”
வெற்று அஞ்ஞானம் -விஞ்ஞானத்தால்
ஞானம் பெற்ற உலகம்

வாழ்க்கை போராட்டமாக, வறுமை இரும்புச் சிலுவையாக
நம்பிக்கை நலிவடையும் வேளைகளில்
‘‘ஏலி ஏலி லமா சபக்தானி’’ எனத் தந்தையைக்
கூவியழைக்கும் எங்களுக்கு
ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்-ஏனெனில்
இறையரசு உங்களுக்கு உரியதே

இப்போது பட்டினியாய் இருப்போரே
நீங்கள் பேறுபெற்றோர்-ஏனெனில்
நீங்கள் நிறைவு பெறுவீர்கள்.

இப்பொழுது அழுவோரே நீங்கள் பேறுபெற்றோர்-ஏனெனில்
நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள். (லூாக்-6-20)
இறைமகன் போதனை நம்பிக்கை அளிக்கின்றது.

ஆயினும் இன்றும் நாம் பட்டினி- மானம் காத்திட
கந்தையாய் ஒரு முழத்துணி,
ஈரவிழிகளிலோ கண்ணீர்த்துளி-நெஞ்சிலோ
இறை நம்பிக்கையின் புத்தொளி

அன்பை வாழ்வாக்கி, உண்மையைத் தவமாக்கும்
எம் வாழ்வோ கல்வாரிப் பாதை
ஆணவம் அழிந்தால் நாமும் இறைமகன்
இறைரசு நம்முள்ளே-ஏனோ எமக்கு உங்கள் மதம்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11.04.2023

எங்களுக்குப் பசிக்கிறது

ஓ சமுதாயமே உன்-சொற்தீயில் தினம்
தீக்குளித்தும்-வேகாத புதிய சீதைகளாய்
கோவலனுக்கும் மாலையிடாத மாதவிகளாய் நாங்கள்
இலக்கியங்களில் நாம் பரத்தையர், பொதுமடந்தைகள்
இன்றைய உலகில் வேசிகள் பாலியற் தொழிலாளிகள்



பல மன்மதன்களுக்கு பஞ்சணையில்-காமன்
விருந்து படைத்ததால்-ஒரு விதத்தில்-நாங்களும்
குந்தி-மாந்தாரி-திரௌபதிகளே
சீதாராமன்களுக்கும்,கோபி கிருஷ்ணன்களுக்கும்
உடற் பசியாற்றும்-அட்சய பாத்திரங்கள்

மெய்யிற்குத் தெரிந்தவை பொய்யாகிட
மெய்ஞானம் பெற்றவர்க்கு அன்பே சிவமாகிட
அன்பும், காதலும் கிடைத்திருந்தால்-கண்ணகிகளே-
நாங்களும் பத்தினிகளாயிருப்போம்-காந்தாரிகளே
நாங்களும் கண்களை கட்டி
குருட்டு கணவனோடு குடும்பம் நடத்தியிருப்போம்

உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்
கோவலனையும், மௌத்த கல்யரிஷியையும்
நாங்களா வருந்தியழைத்தோம்?



குந்திக்கு கணவர் நால்வர்-மாந்தாரிக்கு கணவர் மூவர்
திரௌபதிக்கோ -ஐவர்-வறுமையறியாப்
காப்பிய அரசகுமாரிகள் பத்தினிகள்

சீதன வில்லை உடைத்து, தசரத ராமன் -எங்களைத்
திருமணம் முடித்திருந்தால் நாங்களும் ஜானகிராமன்
எங்கள் வறுமைக் கோட்டைக் கடந்து-இராவணண்
சிறையெடுத்திருந்தால் நாங்கள் சீதா இராவணண்
இன்னோர் தசரதன் இருந்திருந்தால்-ஆயிரம் தாரத்தில்
ஒரு தாரமாய் ஏனும் மாறும் எங்கள் தராதரம்

சீதனம் கொடுத்து மணமகன் வாங்கிட
சொத்தில்லாத ஏழைகள் நாங்கள்
இராமனுக்கும், நளனுக்கும் மாலையிட
வசதியில்லா வறுமைக் குமரிகள்

வயிற்றுப் பசிக்காய்- எங்கள் மஞ்சத்தை
கோவலனோடும், தெருக்காவலனோடும் பகிர்ந்திட்ட
ஏழைப் ‘‘பண்டங்கள்’’ நாங்கள்


ஓ புண்ணியவான்களே பஞ்ச சீலத்தையும்,
பகவத்கீதையையும், பரிசுத்த வேதாகமத்தையும்,
அல்குரானையும் வெளிச்சத்தில் படித்துவிட்டு-இரவில்
காம சூத்திரத்திற்கும்-கொக்கோவிசத்திற்கும்
பொருள் தேடி எங்கள் உடலில்-ஆய்வு நடத்துகிறிர்கள்



ஒரு விதத்தில்-உங்கள்
அந்தரங்கப் பாலியல் ஆய்வுகூடங்களாய்
இராக்கால காமபோகத்திற்காய்
நீங்கள் குத்தகை எடுத்த விளைநிலங்களாய்
விலைமாதர் எங்கள் உடல்கள்

காம சுந்தரர்களே, உங்கள் காமக் களைகள்
கருப்பையில் வேர் கொள்ளாமலிருக்க
களை கொல்லிகளும், பீடை நாசினிகளுமாய்
கர்ப்பத்தடை மருந்துகளும், மாத்திரைகளும்

நீங்கள், காகத்தின் கூட்டில் முட்டையிட்டு
சந்ததி பெருக்க நினைக்கும் காமக்குயில்கள்-
காம போகம் உங்களுக்கு
பாவமும் நோயும் எங்களுக்கு.



பத்தினிப் பட்டத்திற்காய்
எங்கள் ‘‘கற்பை’’ பரிசோதிக்க
உங்கள் ‘‘காமத்தீ’’ போதாது
எங்கள் தேகமும் வேகாது.

உங்கள் காசையும், எங்கள் உடலையும்
பண்டம் மாற்றம் செய்யும்போது
வேசிகள் என்ற வியாபார அந்தஸ்து எங்களுக்கு
வாடிக்கையாளர் அந்தஸ்து உங்களுக்கு.
வேடிக்கைக்கும் ‘‘காமுகர்’’ என்றாள் எங்கள்
‘‘படுக்கை வியாபாரம்’’‘‘படுத்துவிடும’’ அபாயமிங்கே?

களைகளான பச்சை இலக்கியங்களையும்
நீலப்படங்களையும் -கலைகளாக்கிடும்
அசிங்க இலக்கியச் சந்தையில்-நீங்கள் இல்லாமல்
நாங்கள் மட்டும் எப்படி-விபச்சாரிகளானோம்,

எங்கள் தொழில் நா நயத்தை நாங்கள் மறந்தால்
கனவான்களே உங்கள் கௌரவம்
காற்றில் பறந்திருக்கும்-என்ன செயவது
இரவில்தான் என்றுமே எங்கள் விடியல்
உடல் உறவில்தான் எங்கள் சமையல்.



செய்யும் தொழிலை-தெய்வமாக மதிக்கின்ற
பட்டினிப் பாவைகள் நாங்கள்
வயிற்றுப் பசிக்காய், உங்கள் காமத் தீயில்
ஆகுதியாகும் எங்கள் “கர்மயோனிகள்”

ஆடவரின் காமத்தீயில்-அபலைகளின்
கஞ்சிப்பானைகள் செல்வக் கோவலர்களின் மடிகளில்
கண்ணீ சிந்திடும் ஏழை மாதவிகள்

உங்கள் ஒழுக்கச் சமூகத்தில்-பல்கலைகழகம் செல்லாமல்
விபச்சாரிப் பட்டம் பெற்று சுயதொழில் செய்திடும்
வேலையில்லா “விபச்சாரப்”பட்டதாரிகள்-நாங்கள்

சீதனத்திற்கு விலைபோன சீமான்களும்-
சீதனக் காசில் சொர்க்கம் காணும்
அப்ஸரசுகளின் உலகம்-எங்கள் உலகம்

நீதித்தராசில்-எங்கள் பசிப்பாவமும்-
உங்கள் உடற்போகமும் ஒன்றாய் நிறுக்கப்பட்டால்
நாங்கள் பாவிகளே-ஆனால், இயேசுவின் தராசில்
நியாயங்கள் வேறு-நிறுவைகள் வேறு?



இரவில் நடமாடும் இந்திரர்களே-மனத்தாலும்,
இன்னோர் பெண்ணை விரும்பாத இராமன் யாரேனும்
உங்களிருந்தால் எங்கள்மேல் கல்லெறியுங்கள்
நாங்கள் என்றோ கல்லான “அகலிகைகள்”

உங்கள் காமப்பசிக்கு இரையாகும் உடலுக்கு
நீங்கள் கொடுக்கும் கூலி-வயிற்றிற்கும்,
உடல் வாதைக்கும் போதாது-இதற்காய்
நாங்கள் வேலை நிறுத்தம் செய்வதா?

பாலியல் தொழிலாளர் கட்சி தொடங்குவதா?
ஆரம்பித்தால் உங்கள் வீட்டுக் கண்ணகிகள்கூட
அகலிகை ஆகலாம் ஏனென்றால்-நீங்கள்
இந்திரனாய், சந்திரனாய் வாழும் தேவர்கள்

செல்வச் சீமான்கள் பங்குச் சந்தையில்'' வயக்கராவிற்கு''
உச்சவிலை-விபச்சாரிகளுக்கோ மலிவு விலை
எயிட்ஸ்சை விதைத்து-காமபோகத்தை
அறுவடை செய்யும் காமக்காரர்களே-
உங்கள் விபரீத பயிர்ச்செய்கையால்
விளை நிலங்களே தரிசான அவலத்தைப் பாருங்கள்



உங்கள் உடல் பட்டும் எங்கள் "கல் உடல்" கனியாததால்
நீங்கள் இராமர்கள் அல்ல-ஏகபத்தினி விரதர்கள் அல்ல
என்று எங்களுக்குத் தெரியும்-இது உங்களுக்கும் தெரியும்.

உங்கள் மனைவியும், நாங்களும் தீக்குளித்தால்
யார் வேகுவார்?, யார் நோகுவார்?
வேண்டாம் விஷப்பரிட்சை என்றாலும்,
இன்றிரவு வராமல் போகாதீர்கள்
நாள் முழுவதும் நாங்கள் பட்டினி
எங்களுக்குப் பசிக்கிறது.



அல்லிகளாய் இரவில் மலர்ந்து-அல்லிராணிகளாய்-
அருச்சுனர்களே உங்களுக்கு சுகம் கொடுக்கும் எங்களுக்கு
இன்றும் தாலிகள் இல்லை-வேலி இல்லாப் பயிர்கள் நாங்கள்



காமம் தேடும்-உலகில்
காதல் இதயம் தேடும் மனிதன் வந்தால்
எங்கள் இருண்ட வாழ்விலும் ஒளி பிறக்கும்-
கற்பிற்கும் பொருளிருக்கும்
அவன் வருவானா?

அழகிய பொன்னுடலுக்குள் அணையாத
எரிநரகாய்ச் சோகம்-பூவுக்குள் பூகம்பமாய் கோபம்
காமக் கணைகள் உடலைத் தீண்ட-
காதல் கணைக்காய் ஏங்கும் பூவையர் இதயம்,
பாலியல் வன்முறையில் பூக்களோடு
மொட்டுக்களைச் சிறையெடுக்கும் அவலம்
வாழ்வோ ஈரவிழிக் காவியமான துயரம்

மன்மத லீலையை வென்றார் உண்டோ?
மதனை எரித்த சிவனாய் யாரோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11.04.2023

கண்ணீர்

ஓ கண்ணீரே!
விழிகள் சுரக்கும் உவர்ப்பு ஊற்றே
வண்ணக் கனவுகள் கலைந்து-நெஞ்சை
ஆறாத்துயர் வாட்டியபோதும்-தரப்படுத்தலால்-
உயர்கல்வி தடைப் பட்டபோதும்-உயிர்க் காதலும்
பொய்யாய், பழங்கதையாய் மாறி
கனவாய்க் கலைந்தபோதும்-உடன் பிறப்புகள்
இளமையில் அகால மரணமடைந்தபோதும்,
மலரான உறவுகள் முள்ளாய் மாறியபோதும்
விரும்பாததை அடைவதும்,
விரும்பியதை அடையாததும் வாழ்வானபோதும்-
பொங்கி வராத நீ –
கண்ணுக்குள் தூசி விழுந்தபோது
கலங்கி விழி சிவக்க
கங்கையாய் ஓடி வந்ததென்ன?
கண்ணீர்பூக்களாய்ப் பூத்து உதிர்ந்ததென்ன?
உப்புச்சுவையால் -உன் அளப்பெரிய
சோகத்தை சொல்லிச் சோர்ந்ததென்ன?

ஓ!, கண்ணீர்த் துளியே! ஓ கண்ணீர்த் துளியே!
உன் இதயம் என்ன கல்லா இல்லை -முள்ளா?
சொல் நீ துளியே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-04-2023

கருச்சிதைவு

கருவறையே கல்லறையாகும்-
மயானமிது
பிரம்மாவே, உருத்திரனாகும்
புதியவேதமிங்கு

கோயில்களே, விபச்சாரக் குகைகளாகிட
தாய்களே-சேய்களைப்
பலிகொடுத்து பேய்களாகும் கொடுமை

தாய்மையை பழித்திடும்-காமப்பேய்களின்
நரபலியோ கருச்சிதைவு
மோகத்தில் விதைத்ததை-பாவத்தில் அறுக்கும்
சிசுக்கொலையோ கருச்சிதைவு

விளைநிலங்களே, முளைகளை அழித்து
தரிசாகிய கொடுமையுமிங்கே-ரோஜாக்களே
மொட்டுக்களை உதிர்த்து
முட்காடாகிய அவலமுமிங்கே

காக்கைக்கும் குயில் குஞ்சும் தன் குஞ்சானபோது
சில தாய்களுக்கு-தன் குஞ்சே
நஞ்சானது ஏனோ?

கருவறையில்- தொப்புள் கொடியுறவை
கருவறுக்கும் பெண்களுக்கு
திருமணமும்-வெறும் சடங்கே
திருமாங்கல்யமும்-வெறும் கயிறே

காமத்தில் விளைந்த உயிரை
கருக்கலைப்பதென்பது என்ன நீதி?
விபச்சாரியை மன்னித்த இறைமகனும்
கருக்கலைப்பை, உயிர்கொலையாய்
கொள்வார் என்பதே தேவநீதி

கருக்கலைப்பால் கருவறைகளே பிணவறைகளான
அவலமுமிங்கே-சிசுக்கொலைகளால்-அன்னையரே
அரக்கிகளான கொடுமையுமிங்கே.

மானுட மீட்பிற்காய் தன் மகனைப் பலிகொடுத்த
அன்பு இறைவனுமிங்கே, தன்னலத்திற்காய்
தம் சிசுவை கருக்கலைப்பால் பலியெடுக்கும்
கொடிய தாய்களுமிங்கே

தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தாயின் காலடியில்தான் சொர்க்கம் -பொய்யாய்
பழங்கதையாய் வெறுங்கனவாய் போயிடுமோ?
பொல்லாத கொடுமையைத் தாய்மண்ணும் தாங்கிடுமோ?

தாய்மையும், தர்மம் துறந்திடுமோ ?
காமமும், கலவியும்-தரும் இன்பம்
காலமெல்லாம் நிலைத்திடுமோ?

ஒழுக்கம் உயர்வு தரும்
சத்தியம் வெற்றி பெறும்
அன்பே சிவம்!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-04-2023

காதல் தீபம்





உயிரோடு கலந்த உறவின் இழப்பு-நெஞ்சிலோ
தந்தி அறுந்த மரகத வீணையின் தவிப்பு
ஈர விழிகளிலே கண்ணீரின் கொதிப்பு-வாழ்வு
இதுதானா மனதில் சலிப்பு, பிரிவின் தகிப்பு

சிரித்து மகிழ்ந்து காதலாகி-நெஞ்சை
நிறைத்த உறவு-இன்று மனம் புலம்பி
கண்ணீர் சிந்த, மண்ணில் புதைந்து
நெஞ்சில் பொக்கிஷமான நிகழ்வு

பூவாய் பூத்து மணந்த உள்ளம் சோக வெள்ளத்தில்
வாடிச் சோர்ந்திருக்க, சூடிய மலரும் வாடி உதிர்ந்திருக்க
சொந்த பந்தம் வாழ்த்திய உறவும், ஒரு கனவாய் கலைந்து
பொய்யாய் பழங்கதையாய் போகுமோ? தவிக்கும் மனசு



வாழ்வு இறை தந்த வரம்-இனிய இல்லறமோ
கண்ணாளா, நீ சூட்டிய பொன்னாரம்
இதயங்களின் சங்கமத்தில் மலர்ந்த காதல்
இன்றோ பிரிவால் என்னை வருத்தும் சாதல்



இணையைப் பிரிந்த மனதில் இமயத் துயரம்
தோகை இழந்த மயிலாய் காதல் மனதில்
வாழ்வே மாயம் என்ற அவலம்


ஜோடிக் கிளிகளாய் கொஞ்சி மகிழ்ந்த காலமும்
கனவானது, வானம்பாடிகளாய் பாடி மகிழ்ந்த
வசந்தம் கண் மறைந்தது போனது, பருவங்கள்
மாறும் வாழ்வில் எல்லாம் கானல் நீரானது



நெஞ்சிலே காதலின் அழியாத கோலம்
செவ்விழிகளின் ஓரத்தில் உதிரத் தவிக்கும் கண்ணீர்
மழைக் காலம், இதயத்தில்- ஸ்ரீராமனைப்
பிரிந்த சீதையின் மாறாத துயரம்

என் இதயம் மகிழக் காதலாய் நீ தந்த உறவு
என்னைத் தாயாய் மாற்றிய இன்பக் கனவு
தவிக்கும் நெஞ்சில் அமைதியாய் உன் வரவு
இன்றோ தகிக்கும் தனிமையில் என் வாழ்வு

நிறைவோடு விடை கொடுத்து, தனிமையில், நெஞ்சம் நிறைந்த
நன்றியோடு உன்னை நினைந்து போற்றுகின்றேன், பிரிவோ
நெருஞ்சி முள்ளாய் வருத்த, தனிமையில் நான் புலம்புகின்றேன்



மெய்யழியும், பொய்யழியும், உயிர் மெய்யொடு கலந்து
இதயம் நிறைத்த காதல் அழியுமோ? கத்தும் கடல் ஏழும்,
கருவான் நிலவும் சாட்சியாக, என் உயிர் உள்ளவரை
என் இதயம் ஒருபோதும் உன்னை மறவாது இது சத்தியம்

இன்பத்திலும், துன்பத்திலும் இணை பிரியாத வாழ்வு
அன்றில் பறவைகள்போல் ஒன்றான உறவு
என்னைப் பிரிந்த உன்னிலும், உன்னைப் பிரிந்த
என்னிலும் என்றும் வாழும் நம் காதல் உறவு

என் இதயத்தில் நன்றியின் பூரிப்பு,
நண்பனாய், காதலனாய், கணவனாய் என்னோடு
நீ வாழ்ந்த காலங்கள் வசந்தமான நிகழ்வு
நம் வாழ்வோ கடவுளின் மகத்தான அன்பளிப்பு



என் இதயத்தில் எண்ணில்லாத ரணங்கள்
தந்தி அறுந்த என் இதயவீணையில் அபஸ்ரீரங்கள்
நீயோ இன்று மாலையிட்ட படமான நிகழ்வு
அழகிய கனவாய் நம் காதல் உறவு

நீலக் கடலான நெஞ்சில் ஓயாத உன் நினைவலைகள்,
சோகக் சுனையான இதயத்தில் உன்னால் மலர்ந்த
ஆயிரமாயிரம் காதல் தாமரைகள்

உறவும், பிரிவுமான வாழ்வில் வரமும், சாபமுமாய்
இன்ப துன்பம், எல்லாம் நின் சித்தம் இதயம் சரணடைய
இறைவா என் மனதில் அமைதியின் ஆனந்தம்

என் கண்ணீரில் தோன்றும் வண்ணம் குன்றாத
உன் காதல் வானவில்-உன் பிரிவுப் பூகம்பம் வீழ்த்திய
நெஞ்சில் இதழ் உதிர்க்கும் காதல் புஷ்பங்கள்

அன்பு வாழும் நெஞ்சில் ஆயிரம் கோடி இன்பங்கள்
பிரிவு நிஜமென்றாலும், ஒன்றாய் நாம் வாழ்ந்த
வசந்த காலங்கள், நான் வாழும் காலமெல்லாம்
காதலே என் நெஞ்சில் உன் மலரும் நினைவுகள்

மரணம் நம்மைப் பிரித்தாலும். நம் காதலுக்கு அழிவில்லை
நீ மறைந்தாலும் என் நெஞ்சில் மாறாத உன் நினைவுகள்
பொங்கும் பூம்புனலான இதயத்தில் நிலைத்த ஆனந்தம்
உறவிலும், பிரிவிலும் நம் காதலோ பேரின்பம்



மரணம் உனக்கில்லை, என் மனதில் நீ வாழும் வரை
பிரிவும் நமக்கில்லை-என் பிரியமானவனே
என்னில் நீயும், உன்னில் நானும் வாழும்வரை

நெற்றிக்குப் பொட்டில்லை, நெய் தடவும் நீள் கூந்தலுக்கு
வாச மலரில்லை, பொன் மேனிக்கு நறுமணமில்லை ,
நீ தந்த குங்குமமும், மங்களமும் குதுாகலமும் உன்னோடு
போனது, உன் நினைவால் என் உயிர் வாடுது.

என் நெஞ்சில் நீ ஏற்றிய காதல் தீபம் அணையாது
நான் வாழும் காலமெல்லாம் என் நெஞ்சம் உன்னை மறவாது,
கைம்மை எனக்கில்லை, மஞ்சளும், குங்குமமும், மலர்களும்
நெஞ்சில் நிறைய நம் காதலுக்கு வானமும் எல்லையில்லை



அழுதபோதெல்லாம் என் விழிநீர் துடைத்த உன் விரல்கள்,
இன்று உன் பிரிவால் அழும்போது என் கண்ணீர் துடைக்க
நீயில்லாத நிலைகள், நெஞ்சில் குமுறும் சோக எரிமலைகள்

நீயில்லாத இரவுகள் நித்திரையின்றிக் கழிய
நித்தமும் மனம் உன் நினைவில் தவமாய்க் கழிய
என் சித்தம், நினைப்பு, செய்கை எல்லாம் நீயே

மறக்கத் துடித்தாலும்-மறவாது
நினைவில் வரும் உறவு, மரணம் பிரித்தாலும்
என் மனதை ஆளும் காதல் கனவு நீதான்

உன்னை நேசித்த இதயமும், உன்னை சுவாசித்த
உயிரும், இன்றும் உன் நேசத்தால் வாழ்வதை
நீ மட்டுமே அறிவாய்-அது போதும்

உன்னைப் பிரிந்து ஒற்றைக் குயிலாய்க் கரைகின்றேன்
கொஞ்சும் கிளியைப் பிரிந்த அஞ்சுகமாய்த் தவிக்கின்றேன்
என்னுள் நிலைத்த ஆனந்தம், நான் அறிய-நீயே
என்னை ஆட்கொண்ட பேரின்பம்

மையேந்தி ஆடிய விழிகள் நீரேந்தி ஆட
மலர் சூடிப் பூத்த குழல் பூவின்றி வட
வளையேந்தி ஆடி கரங்கள் கைகூப்பித் தொழ
குங்கும் சூடிய நெற்றி வெறிச்சோடிப்போனதே



வந்ததும் உன்னால் , வாழ்வதும் உன்னால்,
என் கடன் முடித்து வருவதும் உன்னால்,
வழியும், உண்மையும், வாழ்வுமானவனே
என்றும் என் புகலிடம் நீயே இறைவா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-12-2023

புத்தாண்டு நத்தார்



இரவு வானில் வாணவேடிக்கைகளின் வண்ணக்கோலங்கள்
மின்னி மறையும் வண்ண விளக்குகளின் அலங்காரங்கள்
நத்தார் கீதங்கள் ஒலிக்க, நள்ளிரவில் பிறக்கும் குழந்தை இயேசு
ஒளி உண்டாகுக இருளில் ஒளிர்ந்த முதல் இறை வாக்கு



பலமணி நேரம் பல்லாயிரம் மக்கள்
கூடிக் காத்திருந்து வரவேற்கப்-பிறந்த புத்தாண்டு
புது நம்பிக்கையளிக்க உலகே கொண்டாடு

ஐரேப்பாவின் கரையைத் தொட- பொங்கும் கடலில்
அல்லாடும் அகதிகள், அமெரிக்காவில் குடியயேற
பல்லாயிரம் மைல் நடந்து-எல்லையில்,
பசி பட்டினியோடு காத்திருக்கும் ஏழைகள்

காஸா, மேற்குக் கரையில் கண்ணீரில் மூழ்கி மடியும்
சொந்தங்கள், உணவுக்கும், மருந்திற்கும்
ஓயாத தவங்கள், உயிரைப் பணயம் வைத்துப்
உக்ரேன், இஸ்ரேலிய இராணுவத்தின் போராட்டங்கள்



அறிவின் உச்சத்தில் மானுடம், அழிவின்
விளிம்பிலோ உலகம், அமைதி இழந்த
மனங்களில், இன, மத, மொழி, நிற பேதங்கள்
காயீன் ஆபேலைக் கொல்லும் வாதங்கள்



வளங்களைச் சுருட்டி வல்லரசுகளாய் மாறி
வாழும் உலகை அழிக்கும் மூடர்கள்
கூலியாய், போராளியாய், பாலியல் கருவியாய்
பாழ்படும் பல கோடிச் சிறுவர், சிறுமியர்

ஓயாத அலைகளாய் வரலாறு எங்கும் யுத்தம்,
அமைதியோ கண் மறைய எங்கும் இரத்தம்
இரவும் பகலுமாய் உலகம், இருண்ட வாழ்வில்
புது நம்பிக்கையின் உதயமாய் நத்தார்



யதார்த்தை தரிசிக்க இதயம் வேண்டும்-நான்
மட்டும் வாழ்ந்தால் போதும், சுயநலம் ஒழிந்து,
வாழ்வோம், பிறரையும் வாழ வைப்போம்
அன்பே சிவமாக-சமதர்ம சன்மார்க்கம்
வாழும் நம் மதமாக வேண்டும்

புது விடியலில் பொற்காலம் மலராது, உண்மையின் விடியல்
உள்ளத்தில் நிகழ்ந்தால் உலகில் யுத்தம் நிகழாது,
அமைதி சுருதி பிசகாது, புள்ளினத்தின் பூபாளமும்
பூக்களில் மலர்தலும் ஓயாது, இன்பம் மறையாது



நாமம், தொப்பி, குல்லா, சிலுவை மதவெறி நாறும்
நம் மனங்களில், அன்பைத் தவமாக்கி, உண்மையை
வரமாக்கி, அமைதி கண்ட அவதார புருஷர்கள்
ஒருவர் சிலுவையில், ஒருவர் போதியின் நிழலில்



நாளை என்பது வெறும் கனவு,-இன்றே
மனதில் அன்பின் விதைகளைத் தூவு-இருமை
கடந்திட வாழ்வு ஏதேன் தீர்த்த யாத்திரை
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம் கீர்த்தனை



இருளில் நம் வண்ணக் கனவுகள், ஒளியில் நாமோ
போராடும் வனவிலங்குகள், உள்ளுணர்வில்
உயர்ந்தால் அன்பே தெய்வம் நாமே

கொலைகள் யுத்தத்தில் கலைகளாகும்
கொன்றவருக்கு பதக்கங்கள், பதவி உயர்வுகள்
மாண்பாகும், மண்ணின் புதல்வர் வீர மறவர்
மடிந்தாலும் மனங்களில் வாழும் நிகழ்வாகும்



ஏழைகளின் வாழ்வில் குண்டு மழை
பருவ காலத்தே உலகில் பெய்யும் மாரி மழை
பருவமும் பொய்க்க சூழலை நஞ்சாக்கிய மனிதன்
மனிதத்தை அழிக்கும் அலகையாய் கொடியவன்



அழுகைச் சுவரும், அல் அக்ஃஸாவும்,
அன்பைப் பகிர்ந்து, உண்மையை அறியத்
தடையான அவலம், மதவாதமோ ஈனம்



எரியும் முட்செடியாய் எங்கள் தேசம்,
இறைவனோ கண் மறைந்த அஞ்ஞாதவாசம்
எங்கள் அவலம் கண்டும் இரங்காத உள்ளம்
வாழ்வோ நாளும் எரிநரகான அவலம்

கண்ணீர்ப் பூக்களை மாலையாய்த் தொடுத்து,
இறைவனுக்குச் சாத்தி-மடிந்த சொந்தங்களுக்காய்
நெஞ்சம் எழுதும் இரங்கற் பாக்கள்-மடிந்தவர்
உடலங்களில் குண்டுகள் சூடிய குருதிப்பூக்கள்

எல்லாம் மாறும் உலகில்-இதுவும் மாறும்,
புத்தாண்டில் புத்துயிர்அளிக்கும் நம்பிக்கை,
அமைதியின் பங்குதாராய் நாம் மாறினால்
உலகில் அமைதி நிலைக்கும், இன்பம் பெருகும்





ஐம்பதாயிரம் கர்ப்பிணித்தாய்கள் மருந்து,
உணவுக்காய் அல்லாட, மனிதத்தைச்
சிதைக்கும் இனமதவெறியர்கள்-மடிந்த பின்
சொர்க்கம் மதவேசித்தன கற்பனைகள்

கால வெள்ளத்தில் வந்து போகும் ஆண்டுகள்,
மடிந்தால் அன்னார் காலமானார் சேதிகள்
மடிந்த உடல் மண்ணுக்கு விதையாக
மனதில் துளிர் விடும் சோக நினைவுகள்

Israel's ongoing barrage in Gaza has exacerbated the suffering of over 50,000 expectant mothers who are now without access to medical assistance & facing life-threatening challenges that are exposing them & their unborn babies to severe health risks.



நம்மில் இயேசு பிறக்க வேண்டும்
அதுவே மெய்யான நத்தார்-இனம், மதம்
மொழி, நிறம் கடந்து கூடி விளையாட
அமைதியின் புது உலகம் வேண்டும்

குண்டு பட்டு மடிந்த குழந்தையால்
மனச்சிதைவுக்குள்ளாகும் தாய்கள்
கண்ணீரிலும், முலைப்பாலிலும்
குருதி கசிய கொடிய மனவேதனைகள்

குழந்தைகளைக் கொல்லும் பாரோ, யாவே, ஏரோது கடவுள்கள்,
அபினியும்,போததையுமாய் அழுகி நாறும் மதங்கள்,
அல் அக்ஃஸாவையும், அழுகைச்சுவரையும் இடித்து தகர்த்தால்
இன்பம் சூழ, அனைவரும் வாழ
நல் இதயங்களில் வாக்களிக்கப்பட்ட தேசம் உருவாகும்



பெத்லேகம் தாய்களை அழ வைத்த ஏரோதின் செங்கோல்,
அன்னை மரியாளின் இதயத்தை ஊடுருவிய சோக வாள்,
எளிய மனங்களில் இன்றும் இயேசுவின் பிறப்பு-
இடையராய், ஞானிகளாய் தன் மகனைக் காண,
அன்பு இறைவன் நமக்கு விடுக்கும்அழைப்பு
கேட்கச் செவியுள்ளோரே கேளுங்கள்
காண விழியுள்ளோரே வந்து பாருங்கள்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-12-2023

மரணம்

என் கடன் கழிந்திட-கடமைகள் முடிந்திட
கர்மவினைகள் அழிந்தபின்
உருவழிந்து பிரபஞ்சத்தில் ஒன்றாகிட
இறைவன் தந்த பெருவரம் மரணம்

உடலம் மண்ணாக-உயிர் விண்ணேக
நான் அழிந்து நீயாகிப்போனேன்-
என் இறைவா

அஹம் பிரம்மஸ்மி
ஓம் ஷாந்தி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-4-2023

மா நரக சபை

இங்கே கூடிப் பெருகும் குப்பைகள்
தெருவில் நாளும் பெருகிட-மா நகரில்
நாறி வீசும் நாளும் ஒரு துர்வாசம்.

செப்பனிடாச் சாலைகளில் புல் வளர்ந்திட
கட்டாக்காலி மாடுகள், சாணமிட்டு மேயும்
வடிகான்களில் நீர் தேங்கிட
“டெங்கு” நுளம்பு கூடிப் பெருகும்

தெருவிளக்குகள் “பார்வை” வேண்டி
காரிருளில் தவமிருக்கும்

மாக்களின் ஆட்சியில் உண்மையும், உழைப்பும்
வேண்டபடாத குப்பைகளாகும், ஊழல் மலிந்து
காலிகள் அமாந்திட, அதிகார நாற்காலிகள்
அடி தடியில் இறங்கி அசிங்கமாகும்.

கட்டபொம்மன்களுக்கு தூக்குமேடையும்
எட்டப்பர்களுக்கு-அரியணையும்
வரலாற்றின் பழம்பாடமாகும்

“ஆட்சி எங்கள் மூச்சு-ஆளுங் கட்சி எங்கள் கட்சி”
தன்மானமில்லாத அடிவருடிகளின் கோஷம்
அழுகி நாறி தமிழ் தேசியத்திற்கு சாணி பூசும்

மாநகராம் மட்டு-மாநகரம்-பழம் பாடலாகி
மாநரகாம் மட்டு- மாநரகாம்-புதுப் பாடலாகி
வசைப்புயலின் இசைவடிவில் புதுப் புயலாய் வீசும்

அண்ணண் ஸ்ரீராமனின் பாதுகைகளை
அரியணையேற்றி, சத்தியத்தின் குரல் ஒலிக்க-ஆட்சி செய்த
“சத்திய பரதன்” எம்மை ஆள வேண்டும்.
மக்கள் குரல் மகேசன் குரலாய் ஒலிக்க வேண்டும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-03-10-2023

நட்பின் மேன்மை

உண்மை நட்பில் பிரிவில்லை, பிரிவதும் உயர் நட்பில்லை
எண்ணில் பூச்சிமாய், இசையில் மௌனமாய்
ஆணவம் மறைந்து நிற்கும் அன்பே, உயர் நட்பு

குசேலனும் கண்ணனும், கர்ணனும் மன்னனும் கொண்டதும்
உயர் நட்பு, ஒருவரை ஒருவர் காணாது, கோப்பெருஞ்சோழனும்,
பிசிராந்தை அடிகளும் கொண்டதும் காவிய நட்பே
மடிந்த மன்னனுக்காய் புலவரும் வடக்கிருந்து உயிர் நீத்திட
வாழ்வு சாவு கடந்து வாழும் தெய்விக உறவாய் நட்பு

கம்பனும், சோழனும் கொண்ட. நட்பும்
கலைந்த கனவானது
ஔவையும், அதியமானும் கொண்ட நட்பு
வாழும் கொடையானது.

குசேலனிடம் கண்ணன் காட்டிய நட்பு,
பிடி அவலினும் இனிது, மனைவியை சேடியாக்கி
மன்னவன் புரிந்த தொண்டும் பெரிது.

நட்பிட்காய் சாதியம் கடந்த, மன்னவனாய்
துரியோதனன், நட்பிட்காய் உயிர் கொடுத்த
நண்பனாய் கர்ணன்

கோல், குடை, படை கொண்டு அரியணை அமர்ந்தானும்
நட்பின்றி வாடிய மன்னன் தருமன்- பெருவள்ளலிற்கு
அரிய நண்பனாய், அன்பினால் இன்புற்ற மன்னன்
துரியோதனன், நட்பினும் கற்புண்டு காவியச் சிறப்புண்டு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

மன்னனின் நட்பு





யுத்த பூமி குருஷேத்திரம், இரத்தம் காய ஓய்ந்து கிடந்தது
இருள் சூழ்ந்த பூமியின் எல்லையில், எரியும்
ஆயிரமாயிரம் சிதைகள்,-காற்றில் கலந்து வரும்
அன்னையர், விதவையர் ஒப்பாரி, அழுகைகள்

மலர் மஞ்சமிருந்தும் தனிமையில் தரையமர்ந்த நெஞ்சில்
தீராச் சோகம், விளக்கேற்ற வந்த பணிப்பெண்களும்
சோகத்தில் விலகிட, சூனியத்தில் நிலைத்த ஈர விழிகளில்
வெறுமையின் பாவம், நண்பனில்லாத வாழ்வோ மாயம்

இருள் சூழ்ந்த அறையில் அமர்ந்திருந்த
துரியோதனன் மனதில் அளவில்லாத் துயரம்,
ஈடு இணையற்ற அரிய உறவை இழந்த பெருஞ்சோகம்
நட்பு மனதிலோ காரிருள் நிலைத்த அவலம்

என் நண்பன் கர்ணன் இறந்தானோ? என்னுயிரோடு
கலந்த உறவு என்னை விட்டுப் பிரிந்து போனதோ?
நீயில்லாத உலகு கதிரில்லாத வான் ஆனதே, கர்ணா
தனிமையும், சோகமும் என்னை எரிநரகாய் வாட்டுதே?



வாரி வழங்கிய கரங்கள் வாடிக் கிடந்ததென்ன?
சூரிய புத்திரனைச் சதியால் வீழ்த்தியதென்ன?
அஞ்சா நெஞ்சத்து மன்னவனை வீழ்த்த-மாயக்
கண்ணணின் லீலைகள்தான் என்ன?



அம்புகள் தைத்த நிலையிலும் புரிந்த, தான தர்மங்களை
அந்தண வேடத்தில் கண்ணண் வரமாய்க் கேட்டதென்ன?
கேட்பவன் கண்ணன் என அறிந்து, குறுநகையோடு
குருதியால் வாரி வழங்கி, வள்ளல் மகிழ்ந்ததென்ன?

எண்ணி விம்மிய நெஞ்சில்-எண்ணில்லாச் சோகங்கள்,
தன் கரம் பற்றி மொழிந்த கர்ணன் வார்த்தைகளிலோ
அழியாத நட்பின் பாவங்கள்
செஞ்சோற்றுக் கடன் தீர்த்த நன்றிக் கோலங்கள்

சாதியம் கடந்து, தேரோட்டி மகன் என இகழ்ந்தவனை,
அங்கத நாட்டுக்கு மன்னனாக்கி அரியாசனம் தந்தாய், வள்ளலாய்
வாரி வழங்கிட, குறையாத செல்வத்தையும் தந்தாய், குன்றாத
நட்பையும் தந்த, உன் பெருமைதான் என்னே! வண்மைதான் என்னே!

ஆட்டத்தின் பாதியில் உன்னைக் கண்டெழுந்த ராணி பானுமதியின்
மேகலையை நான் பற்றி இழுத்திட, மேகலை அறுந்து மணிகள் சிதறிட-
புன்னகையோடு, பொறுக்கவோ, கோர்க்கவோ என்ற குணம்தான் என்ன?
என் தாரம், உன் தங்கை என்று என்னைத் தேற்றிய மேன்மைதான் என்னே!



உங்கள் புனித உறவை என் மனம் அறியும், கலங்காதே,
அமைதியில் நிலைத்த என் மனதால் அறுந்த மணிகளை
பொறுக்கவும், கோர்கவும் முடியும், மொழிந்த வார்த்தகைளில்
ஒலித்த புரிந்துணர்வும், பெருந்தன்மையும்தான் என்னே!

வறியோர் பொருள் கேட்டார், பெற்ற அன்னையோ
தன் புதல்வரைக் காக்க வரம் கேட்டார்,
கவச, குண்டலங்களை இந்திரன் கேட்டார்
கண்ணனோ செய்த தான தருமங்களைக் கேட்டார்

எதையும் என்னிடம் கேட்காது, எல்லாம் நீயோ தந்தாய்
உன் தம்பியர் அனைவரும், உன்னைப்போல் என்னை மதிக்க
அன்புக் கட்டளையிட்டு, நான் வேறு நீ வேறு அல்ல என்றாய்
உத்தமனே, உன்னைப்போல் நண்பனும் உலகில் உண்டோ?

அந்தணன் சாபத்தால் தேர்ச்சக்கரம் புதைந்திட, அன்னைக்கு
கொடுத்த வரத்தால் நாகாஸ்திரத்தை மறுமுறை ஏவ மறுத்திட,
சல்லியன் கோபத்தில் விட்டு விலகிட, குரு பரசுராமர் சாபத்தால்
கற்ற வித்தைகள் மறந்திட, காலன் என்னை நெருங்கிய காலம்



சூரியபுத்திரனை கங்கையில் விட்ட பெற்றவளோ
நாலும் தெரிந்த சீமாட்டி க்ஷத்திரிய இளவரசி,
அன்னையாய் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தேரோட்டி
அதிரதன் மனைவி ராதையோ அன்புக்கரசி

சாதி, குல தர்மம் பேசி என், திறமையை மதியாது
இகழ்ந்தவரோ கற்றறிந்த உயர் ஜாதி,
கோல், முடி. குடை தந்து என் திறமையைப் போற்றிய
உத்தமனோ சாதியம் கடந்த மனித நேயன்

அரியணையும், அழியாத நட்பையும் ஈந்த மன்னவனே
கலங்காதே, காலத்தால் அழியாதது நம் நட்பு
காவியமாய் நிலைக்கும் நம் உறவு-

மன்னனாய் நீ தந்த வாழ்வு, மாவீரனாய்
உனக்காய் சாதல் கர்ணன் எனதன் கனவு-இன்று
நனவாகிட, சொர்க்கத்திலும் தொடரும் நம் நட்பு

உன் நட்போ நான் பெற்ற பெரும் பேறு, என்றும்
என் ஒரே உறவு நீ என்று உலகறிய
என் ஈமக் கிரியைகளை நண்பனாய் நிறைவேற்று

அண்ணனாய் உலாவிய அழகிய உறவு வீழ்ந்ததை அறிந்திட
பானுமதி, பூ நெஞ்சிலே தீராத பெருஞ் சோகம்,
கணவனைத் தேற்றிடக் கண்ணீரோடு ஓடோடி வந்த பெண்மை
கண்ட காட்சியோ, ஓசையின்றிக் குலுங்கியழும் நட்பின் மேன்மை





கலிங்கத்து இளவரசி பானுமதியைச் சுயம்வரத்தில்,
கரம் பற்றிக் கவர்ந்திட, கர்ணனோ பெருந்துணை
காலத்தே, மனம் மாறிக், கணவனாய் ஏற்றவள்
காதலால், மன்னவன் மண வாழ்வோ தேன்சுனை

பாஞ்சாலிக்கு நேர்ந்த கொடுமையால் கொதித்து
உறவைத் தவிர்த்த பெண்மை, அண்ணனாய்
வந்த அழகிய உறவோ வள்ளல்களிலும் மேன்மை
வீழ்ந்ததை அறிந்து புலம்பிய நெஞ்சோ தாய்மை

தீபங்களை ஏற்றியவள், தன் கணவனை குழந்தைபோல்
மார்போடணைத்திட, தாரத்தின் மடியில் தலைவைத்து,
விழி சிவக்க கண்ணீர் சிந்தி விம்மல் பெருமூச்சாய் மாறிட
அழுதவனோ அன்புக் கணவன், கர்ணனின் அரிய நண்பன்





இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-10-2023

நெம்புகோல்

பூமிபந்தை புரட்டிப்போட-அன்று
ஆர்க்கிமிடிஸ் கேட்டதோ
நிற்க இடமும், ஓர் நெம்புகோலும்.

இருண்ட நெஞ்சங்கள் ஒளி காண,
படிக்கும் நெஞ்சங்களைப் புரட்டிப்போடும்
வள்ளுவப் பெருந்தகையின் குறளும் நெம்புகோலே-

பகுத்தறிவில் நிலைத்து, கருணையைக் வாழ்வாக்கும்
மத்திம பாதை காட்டிய பெருமான் புத்தரின்
போதனையும் தம்ம நெம்புகோலே


சிந்தனையில் புரட்சி விதைத்து
அமைதிக்கு அழைப்பு விடுக்கும் -மனுமகனின்
உண்மையின் குரலும் அற்புத நெம்புகோலே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

ஒரு பிடி கடுகு–கிஸ்ஸ கோதமி

மொழியில் வடிக்க அழகோ காவியம்-காதலாகி
நெஞ்சில் எழுத வண்ண ஓவியம்- காளையர் நெஞ்சை
வருத்தும் காமனின் மோகனாஸ்திரம்-கண்டவர்
நெஞ்சிலே தைக்கும் காதலின் பிரம்மாஸ்திரம்





அங்கமெல்லாம் அழகு ஜொலிக்க
மங்கையோ பூத்த புதுப்பங்கயம்-ஆனிப்
பொன்மேனியில் மல்லிகையின் நறுமணம்
காதல் வசந்தமோ அழகின் இலக்கணம்

வட்ட நிலவிற்குப் பொட்டு வைத்து
வாச முல்லையை கார் குழலில் படரவிட்டு -குமுதச்
செவ்வாயில் அமுத மொழி வைத்த அழகு,
செல்வத் தந்தையின் ஒரே வண்ண நிலவு



பூ விழிகள் மலர, புன்னகையில் முத்துக்கள் ஒளிரக்,
நாணிடும் செங்கன்னங்களோ கிண்ணம் பழம்,
கண்டு காதலில் விழுந்து கவிபாடும் -ஏழைக்
காளை நெஞ்சில் காதலின் வசந்தோற்சவம்

மொழியில் குயிலாகி, நடையில் அன்னமாகி
சாயலில் தோகையாகி, மனம் சூட காதல்
மல்லிகையான மங்கையின் மைவிழிகள்
காளை நெஞ்சில் எழுதியதோ காதல் கவிதைகள்




கட்டழகுக் காளையோ தந்தையின் கூலியாள்
கண் பார்த்து நெஞ்செழுதிய காதலோ ஓவியம்,
ஏழை, செல்வன் நிலை கடந்து இரு மனம் ஒப்பிட
எழுதியதோ அன்புக் காவியம்

இரவெல்லாம் விழித்திருந்தேன்-இதயத்தை
உன் இன்பக் கனவுகளால் நிறைத்திருந்தேன்
நினைவெல்வாம் தேனாக, காணும் காட்சி எல்லாம்
உனதாக, கண்ணாளா காதலின் மாட்சி கண்டேன்

என் மெய்யிலோ நாணத்தின் வண்ணம், மீட்கும்
என் வீணையிலோ இன்னிசை வெள்ளம்- உன்னை எண்ணிட
கலை மானாய்த் துள்ளும் மெல்லிடையாள் உள்ளம்

காதலோ அன்பின் புது வரவு, இளமை ஊஞ்சலாடும்
இரு மனங்கவர்ந்த இன்ப உறவு, இல்லறத்தில்
நின்று, இன்பத்தில் துய்த்திட, செல்வத் தந்தையைத்
துறந்து கண் மறைந்த காதலர் உலகு






கண் வழி நுழைந்து நெஞ்சில் விழுந்த காதல்
நெஞ்சைக் கொள்ளை கொள்ள, பெருஞ்செல்வத்தை
துச்சமென மதித்து, காதலனோடு கண் மறைந்த கன்னி,
தந்தையின் நெஞ்சை சுக்கு நூறாக்கிய சோக நிலக்கண்ணி

தந்தையின் ஆசைக் கனவுகள் காற்றோடு கலந்திட
சிந்தையைச் சோகக் கறையான்கள் அரித்திட
மனம் நொந்து நோயில் விழுந்தும்,
நொந்தும் மகளைக் கடியாத அன்புத் தந்தை

கரை கடந்து அக்கரையில் கூடுகட்டிய
சோடிக் கிளிகள், கால வெள்ளத்தில்-குஞ்சுகள்
இரண்டை ஈன்ற கோலமயில்கள்

பட்டாடை உடுத்தி, பணியாட்கள் ஏவலுக்கு காத்திருக்க
நாளும் அறுசுவையோடு நல்லுணவு உண்டு, மாட
மாளிகையில் மலர் மஞ்சத்தில் உறங்கி எழுந்த ராணியான
வாழ்வு, காதலுக்காய் ஏழ்மை பூண்ட நிகழ்வு






ஓலைக் குடிலில், ஒரு பாயில் இருவர் உறங்கி,
பசி வரப் பழஞ்சோறுண்டு-எளிமையான வாழ்வில்
இதயம் நிறைத்த காதல் செல்வத்தைப் பரிகசித்தது

வறுமைப் புயல் வாட்டிடும் வாழ்வில்
மாறாத வசந்தமாய் நிலைத்த காதல்
பொறுமையை அணிகலனாய்ப் பூண்ட மங்கை
இல்லறத்தை நல்லறமாக்கிய அம்மை

கடும் புயலோடு பெருமழை பெய்ய
ஊரெங்கும் பெருவெள்ளம், வாழ்ந்த குடிலும்
காற்றோட போயிட, உடுத்த கந்தையோடு
தந்தையைத் தேடிய பந்தம்




மனைவி குழந்தைகளோடு கணவன் வழி காட்ட
அக்கரை சேர்ந்தால் அன்புத் தந்தையிடம்
அடைக்கலம், தந்தையை நாடிய பயணம்
தம் துயர் தீரும் மங்கையின் மனதிலே ஆனந்தம்

கொட்டும் மழையில் மனைவி குழந்தைகளை பாதுகாப்பாய்
இருக்க வைத்து, நதிக்கரை நாடிச் சென்ற துணைவன்,
நாழிகைகள் செல்ல, பதறித் தேடி வந்த தலைவி காண
அரவம் தீண்டி பிணமாய்க் கிடந்த அன்புக் கணவன்



பருவத்தில் வந்த காதல் வசந்தம்-தந்தைப்
பாசத்தை மறைக்க, அழகன் உருவத்தில்
உள்ளம் கொண்ட காதலை காலன் -அரவமாய்
மாறிப் பறிக்க, விக்கித்து நின்ற பேதை

சொல்லி மாளாத் துயரம் பூ நெஞ்சைக் கொல்ல,
பந்தமாய் வந்த உறவு பாதியில் சொல்லாமல் பிரிய
பிள்ளைகளை மார்போடணைத்து அழுத அன்னை




மாண்டவன் உடலை புதைத்து, மாறாச் சோகத்தை
நெஞ்சில் விதைத்து, மகவோடும், மகனோடும்
நதிக்கரை நாடிய அன்னை விழிகளிலோ வற்றாத கங்கை



வெள்ளம் வடிந்து நதி ஓட, நெஞ்சில் சோக வெள்ளம்
பெருகி ஓட, கரையில் மகனை இருத்தி, மகவோடு
அக்கரை சேர்ந்தவள் குழந்தையை பத்திரமாய் வைத்து,
மகனை அழைக்க இக்கரை நாடி நதி கடக்கும் உத்தமி

பாதி நதி கடந்தவள் பார்வையில்-பச்சிலம் குழந்தையை
வட்டமிடும் கழுகுக் கூட்டம், உயிர் பதற, உள்ளம் நடுங்க
மேனி சிலிர்க்க, கைகளை அசைத்து கத்திக், கதறி விரட்டி
நடாற்றில் செய்வதறியாது நின்ற அபலை

அன்னையின் கையசைப்பில் அம்மா அழைக்கிறாள்
என்றெண்ணி நதியில் இறங்கிய சிறுவன், ஓடிடும் கங்கை
உறவைக் களவாடிச் செல்ல, உறங்கிய குழந்தையை
கழுகுக் கூட்டம் உணவாய்க் கொள்ள பதறிய அன்னை



கங்கை இழுத்துச் செல்லும் மகனைக் காப்பதோ,
கழுகுகள் கொத்தும் குழந்தையை மீட்பதா?
கண்ணில் நீர் எழுதிக் கலங்கிய தாய்மை
விண் வாழ் தெய்வங்களை வேண்டிய பெண்மை



ஓடித் துரத்த குழந்தையின் பிஞ்சு உடலை
கொத்திக் குதறிக் கவ்விச் சென்ற கழுகுக் கூட்டம்
கரையெங்கும் ஓடித் தேடி, ஒதுங்கிய மகனுடலைத்
தேடிக் கண்ட தாயுள்ளத்திலோ சூனியம்

மடிந்த மகனை மார்பில் சுமந்து, இமயச் சோகத்தை
நெஞ்சில் சுமந்து, கண்ணீரும் கம்பலையுமாய்
இட்ட அடி நோக, எடுத்த அடி தள்ளாட
ஊர் வந்த மங்கை கண்களிலோ வற்றாத கங்கை





நங்கை உற்ற துயரைச் சொல்ல வார்த்தையில்லை,
கைமை பூண்ட மங்கை, கணத்தில் பிள்ளைகளைப்
பறிகொடுத்து, பித்தாகி, கரையேறிய பேதை


விழிகளில் கங்கையின் ஈரம்-நெஞ்சிலே
காங்கையின் வெப்பம், கதறினாள், பதறினாள்
மண்ணில் விழுந்தழுதாள், தெய்வங்களைக்
கூவியழைத்தும் தேறுதல் காணாத அம்மை

நெஞ்சம் எரிமலையாய்ப் பொங்க நேசனை நினைந்தழுதாள்,
பெற்ற வயிறு பற்றி எரியப் பிள்ளைச் செல்வங்களை எண்ணி
அழுதாள், தந்தையை நாடியவளுக்கு, தாயுமானவன் மரித்த சேதி
இடியாய்த் தாக்கிட இருதலைக் கொள்ளி எறும்பாய் செல்வி



பெற்ற தாயிலும் மேலாய் நேசித்த தந்தையை
புயல் வீழ்த்திட, மாட மாளிகையும் மண் மேடாகிட,
அப்பா, அப்பா என மார்பறைந்து புலம்பியழுதாள்
மகளும், மனைவியும், தாயுமானவள்

இரு மனம் கலந்திடப் பூத்த காதல் நந்தவனம்
காதல் மனங்களில் நாளும் ஆனந்த நறுமணம்
பிள்ளைச் செல்வங்களால் வாழ்வோ இன்பவனம்-இன்று
எல்லாமிழந்த அன்னையின் வாழ்வோ பாலைவனம்




ஈடு செய்ய இயலாத இமயச் சோகம்
இதயத்தைத் தாக்கிட, ஆறுதல் எட்டாத வானில்
அமாவாசை நிலவாய் மறைந்திட, அழுதாள்
புலம்பினாள் ஆறுதல் வேண்டிக் கரைந்தாள்



மங்கையின் கண்ணீர் மடை திறந்த வெள்ளமாய்ப் பாய
உற்ற துயர் கெட்டு ஊரார் வருந்திட, பெரியார் ஒருவர்
தேற்றினார், மகளே சென்று காண் பெருமான் புத்தரை
உன் துயர் நீக்கும் மாமருந்து போதிசத்துவர் ஒருவரே

மரணம் தவிர்க்க முடியாது ஒன்று,
வருவதை அறிவோடு ஏற்பது நன்று
ஞானம் பெற்ற பெருமானின் கூற்று

செவ்விழிகள் கண்ணீர் சிந்தி வருந்த, ஈரப் புடவை
புழுதி படிந்து வருந்த, இமயச் சோகத்தை
மனம் சுமந்து களைக்க, பெருமான் புத்தரை நாடி
ஓடி வந்த பேதை, சொந்தங்களை இழந்த அநாதை






பொன் எழில் பூத்த காலையில் பூத்த புத்தம்
புதுப் பங்கயமாய் பெருமானின் பிரசன்னம்-பொன்
மொழிப் போதனையில் குணம் கண்ட கூட்டம்
பெருமானின் பிரசன்னத்தில் பூத்த சத்சங்கம்


கதிர் முகம் பார்த்துப் பூரித்த சூரிய காந்தி,
கதிர் மறைய, அம்மா என்னும் மழலை கானம் மறைய
இதழ் உதிர்த்து சோபை இழந்து, இமயச் சோகம்
வருத்த பெருமான் பாதம் சரணம் என்ற தோகை

அன்னையின் துயர் கேட்டு -வருந்திய அருந்தவம்
தாயே , உங்கள் துயர் நீங்க ஒரு வழியுண்டு
ஒரு பிடி கடுகு பெற்று வாருங்கள்-ஆனந்தம் மலர
கை கூப்பித் தொழுத அன்னை

ஆனால் அம்மா, கடுகு தரும் வீட்டில் மரணம்
நிகழ்ந்திருக்கக் கூடாது, காலன் நுழைந்திருக்கக்
கூடாது, உறவு முறையில் மரித்தவர் துயர் சொல்ல
அந்த வீட்டில் யாரும் இறந்திருக்கக் கூடாது



தேறிய மனதில் ஊறிய நம்பிக்கை தெம்பளிக்க
கடுகி நடந்தவள், ஊராரிடம் ஒரு பிடி கடுகு கேட்டாள்
தர முன்வந்தவர் முன் தாய் கேட்டாள்-தாயே
உங்கள் வீட்டில் யாரும் இறந்தது உண்டோ?




தாய், தந்தை இறந்தார், செல்லச் சேய் இறந்தான்,
உற்ற கணவன் இறந்தான், பேரன் இறந்தான்
இறப்பில்லா வீடும் உண்டோ மகளே
பிறந்தவர் இறப்பது இயற்கையன்றோ?

மாலை வரை கடுகு பிச்சை கேட்டு கரைந்தழுத அன்னை,
உண்மையை அறிந்தாள். பிறந்தவர் இறப்பது இயற்கை வகுத்த நியதி
வீணாய்ப் புலம்பியழுவது பற்றால் வரும் கெடுதி

மகனைப் புதைத்து மனதில் சோகத்தை விதைத்து
பொங்கும் கண்ணீரோடு நின்ற பூவையோ, புயல் அழித்த பூவனம்,
கொழு கொம்பின்றி புழுதியில் அலையும் முல்லை வனம்

மண்ணில் புதைந்து மறைந்தது மண்ணலான உடல்
உணர்வுகளில் கலந்து, உயிரை வாட்டும் சோக
நினைவுகளின் ஓயாத அலை- கண்ட இன்பக் கனவும்
ஒரு பொழுதிற்குள் கலைந்திட அநாதையான நிலை






குளித்து, உடைமாற்றி உள்ளம் நொந்த தேறிய
அன்னை, பெருமான் பாதம் சரணடைந்தாள்
துக்கம், நீங்கிட வழி காட்டுங்கள்
வாழ்வு துக்கமானது விசும்பி மொழிந்தாள்

இவ்வுலகில் இறந்தவரோ பலர், இங்கே
வாழ்பவரோ சிலர், அவர்களும் இறக்க வேண்டும்
பழுத்த கனி மரத்தில் நிலைப்பதில்லை-தாயே
என்றுமுள்ள தர்மத்தின் நியதி இது

வாழ்வோ இன்ப, துன்பம் நிறைந்த குறுகிய கனவு
பிறந்தவர் யாரும் மரணத்தை கடந்து வந்ததில்லை
மூப்பு, பிணி, சாவு வருத்தும் உலகில் இன்பமில்லை




மரணம் நிகழாத வீடில்லை, மரித்தவருக்காய்
புலம்பாத உறவில்லை, மரணம் மாறத் துயர்
உண்மை அறிந்த மனத்திலே ஒளிரும் ஞானச் சுடர்

உண்மையை அறிந்தால் ஒளிரும் சுடராய் வாழ்க்கை,
நெய் வற்றிட அணையும் சுடராய் யாக்கை,
பற்றறுத்தவர் வாழ்வை துயர் பற்றுவதில்லை
குகையில் எரியும் தீபம் புயலில் அசைவதில்லை



குயவன் செய்த மண்பாண்டங்களாய் மனிதர்
குழந்தை, சிறுவன், இளைஞன், முதியோன் என
நாளும் மரணம் அழித்திடும் உயிர்கள்-எல்லாம்
மாறுபடும் உலகில், மாறாதது ஏதுமில்லை



உற்றார் , உறவினர் அழுது புலம்பிட
ஒருவர் ஒருவராய் உறவுகளின் மரணம்
வெட்டக் கொண்டு செல்லப்படும் ஆடுகள்போல்
துக்கத்தால் நிறைந்த உலகில் மனிதர்கள்

உண்மையைப் புரிந்தால் அமைதியோ பெருநிதி,
பற்றறுத்த வாழ்வோ பெருநிதி, கண்ணீர்,
துக்கம் என்னும் அம்பை உண்மையால் பிடுங்கி எறி
துன்பத்தைக் அறிந்து கடந்தால் இன்பம் மாறாத விதி

அழுவதனால் பயன் என்ன?, அழுது புலம்பி
உடலை வருத்தி நோயில் விழுவது மதியீனம்
அறியாமையைக் கலைய, ஆசையை அறுக்க
உண்மையை அறிந்து துன்பத்தை கடப்பது ஞானம்;





ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் திரும்பி வருவதண்டோ? மரித்தவர்
மறைந்திட-மரணத்தின் பின் விதைத்தவற்றை
அவரே அறுத்திட, அதுவோ மாறாத விதி

தம்மத்தில் நிலைத்து, பஞ்ச சீலத்தைப் பற்றி
அட்டாங்க மார்கத்தில் ஒழுகி,
உண்மையை அறிவாய்,
உனக்கு நீயே அரணாகிப் போவாய்



என் துயர் பெரிதென்று அழுதது சுயநலம்,
உண்மையை உம்மால் அறிந்த மனதில் நிம்மதியோ
பெரு வரம், கரம் குவித்து வணங்கிய மங்கை
பெருமான் புத்தரிடம் சரணாகதியடைந்த அம்மை



ஆசையும், அறியாமையும் மனதிலே ஓயாத அலை
மூப்பு, பிணி, சாவு. மனிதரை வருத்தும் நிலை
உண்மையறிந்து பற்றறுத்தால் துன்பமில்லை-முற்றும்
துறந்தவருக்கு ஞானம் கிட்டும் பொய்யில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-1-2024

பாவி

அழுது சிவந்த விழிகள் பேரானந்தத்தால் மலர
இழிந்த பாவி என்னையும்-இறைவன்
திருச்சபை நடுவே தன் மகன் என்றார்:

உலக இன்பமெல்லாம் மாயை என்று நானறிய
எங்கும் எதிலும் தோல்வியை தந்தே
ஏழை என்னையும் ஆட்கொண்டார்:

என்றும் நான் அவரோடு வாழ
என்னில் தன்னைக் காண
என் சிலுவையை நான் சுமந்து
தன்னைப் பின் செல்ல அருள் புரிந்தார்:

இன்று நீ என்னோடு பரகதியிலிருப்பாய்
என்பதை தினம் சுவைக்க
தூயபிரக்ஞ்சையின் பேரானந்தத்தை
சுவைத்திட அருள்புரிந்தார்

என் தந்தையே என் இறைவா
நன்றி- நன்றி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-04-2023

பக்தி -விதோபா

அன்புத் தாயின் உயிர் அணைவதா?, எரிவதா? என ஊசலாட
கணைபட்ட மானாய் நெஞ்சம் வருந்த, அம்மா என்ற
அற்புத உறவும் அணையுமோ, என்னைப் பிரியுமோ மனம் தவிக்க-
கண்ணீர் உதிர்வதா? உறைவதா எனத் துடிக்க வாடி நின்ற அருமை மகன்

உயிர்மூச்சாய், உதிரமாய் என்னுள் ஓடி மகிழ்ந்து ஆடிப்பாடியவள்
உறங்கிடும் நேரம் வந்ததென்று படுத்திருக்க, அருகமர்ந்த மகன்
-விசிறி அன்னையின் கால்களை வருடி, கவலை சூழக்
காத்திருக்க, வாழ்வும் சாவும் சந்திக்கும் பொழுது அது

பிறவி பல எடுத்தும்-உன்னைப் பிரியேன் கண்ணா என்றே
கிருஷ்ண பக்தி வளர்த்தவன், கண்ணா
உன் தரிசனம் தா எனத் தவமாய்த் தவமிருப்பவன்-
அன்னை அருகே அருந்தவமிருந்த நேரமது.

அவன் அழைப்பும் கானாமிருதமாய் கண்ணனைச் சேர
பிறவியெல்லாம் தவமாய் வாழ்ந்த வாழ்வு-பகவான்
கண்ணனை அழைக்க, கண்ணனோ காட்சி தரவில்லை
பக்தனோ தவத்தைக் கலையவில்லை

எடுத்த பிறவி எல்லாம்-உன்னை நினைத்தே மனம் உருக
உலாவும் காற்றும், உதிரமும், உன்தன் பக்தியால் கொதிக்க
கண்ணா நீ வரவில்லை-உன்னைக் காணாமல் விழிகளும்
செம்பூவாய் சிவக்க, மூடிய விழிகளுக்குள் கசியும் ஈரம் வற்றவில்லை

துடிக்கும் இதயத்தில், ஓயாது ஒலிக்கும் பகவானின் நாமம் ,
வறுமைக் குடிலில் நாவரண்டு அணைவதா எரிவதா எனத் தவிக்கும்
விளக்கின் பாவம், பாயில் அன்னையின் கடைசி யாத்திரை
கால்களை வருடி கண்ணோக்கும் விழிகளிலோ கண்ணீர்த் திரை

பார்வை மங்கி சோகம் இதயத்தை நிறைக்க-சூனியமான இதயம்
எல்லாம் மாயை என்றுரைக்க, ஆர்வமாய்ப் பக்தனைக்
காண வந்த கண்ணன், அன்னையின் வேதனையில்
அகிலத்தையும், தன்னையும் மறந்த அன்பு மகன்

வந்தவனை வா என்றழைக்காமல், பார்வையால் ஏனும்
நல்வரவு கூறாமல், அமர்ந்த கல்லை, அமர்க என்றே ஈந்தவன்
அன்னையின் சோகத்தில் தன்னை மறந்த பிள்ளை, தாயே தெய்வம்
என்றறிந்து பக்தனாய் சேவகம் புரிந்து நின்ற வேளை

அமுதளித்த கரங்களைத் தடவி, ஆறுதல் மொழிந்த
மொழிகளை எண்ணி உருகி, ஓடி உழைத்த கால்களை வருடி
தணியாத் தன் துயர் தணிய, தாயின் பாதத்தில் தலை வைத்து
அம்மா அம்மா என அழுத பிள்ளை

காலமெல்லாம் யாத்த தவம்-பூத்து, வரமாகும் வேளையில்-வந்தவன்
கண்ணன் என்றறியாமல், வாழவைத்த தெய்வத்தை பூஜிக்க- அன்பு மகனின்
அருந்தவம் கலையாமல், தாய்மையின் பெருநிலை அறிந்தவனும்-
வரமாய்க் காட்சி தர, தவமாய் கல்லின்மேல் விடியும்வரை காத்திருந்தான்-

ஒரு முறை திரும்பி நோக்கினால், பல முறை எடுத்த பிறவிப்பயன் தீரும்
பார்க்கத் துடித்த பகவானே, பக்தனுக்குத் தரிசனம் தர
வீடு வந்து காத்திருக்க-பாராது, தாயே தெய்வம் என மகன்-தன்
தாயை பூஜித்து பூசை செய்த நேரமது.

அழுதாலும், இமை அசைந்தாலும், அன்னையின் திருவுருவும்
மறையும் என்றே, இமைக்காது, கண் உறங்காது, கால்களை வருடி
வந்தவரைத் திரும்பியும் பாராது, வாழ்வாய் நின்ற தெய்வத்திற்கு விசிறி,
அன்னையைத் தெய்வமாய் பூஜித்த அழகிய நேரமது

எண்ணம்தான் அம்மா என்றழைக்க-இதயம்தான் அனலில்
விழுந்த புழுவாய் துடிக்க, கண்களும் அருவியாய் நீர் சொரிய
தாயே தெய்வம் என அறிந்த மனம், கண்ணனைக் காணும்
ஆவல் இன்றி கர்மயோகியாய் அன்னையைப் பூஜித்த நேரம்

காலையும் மலர-கண்ணயராத மகனும், தீராச்
சோகத்தில் மூழ்கி தன்னை மறக்க, ஊரார் காண முன்
நின்ற கல்லில் கண்ணனும் சிலையாய் மாறிட
வானகம் போன தெய்வத் தாய்

காணத்தவித்த தெய்வத்தை சிலையாய் கண்டான்-கண்ணனே
பக்தன் தன்னைத் தேடி வந்து-வீட்டைக் கோயிலாக்கிய அன்பை
பாடிக் களித்தான், என்பும் சதையும் கடந்து-அன்பே
உருவான அன்னையில் தெய்வம் கண்ட புதல்வன்

காந்தமாய் ஈர்த்த தாயன்பு, கண்ணனே வந்தபோதும்-
காந்தவூசியாய் திசை மாறாது தாய் முகம் நோக்கி நின்ற-
பாசமழகு, பக்தனுக்காய் விடியும்வரை காத்திருந்த
பகவானின் கருணையோ-பேரழகு

அன்னையே தெய்வம் என்ற பிள்ளைக்கு, சிலையாய், கண்ணனின் காட்சி
சாட்சியானது, அன்னையே தெய்வமாக, கர்ம யோகமான வாழ்வில்
கண்ணனைக் காணும் ஆவலும் கடந்து போனது, சூனியமான இதயம்
சச்சிதானந்தமானது-அஹம் பிரம்ம அஸ்மி அனுபூதியானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14.8.2023

பசியும் பாவமும்

பசி வயிற்றைக் கிள்ளப்-பால்குடி மறவாப் பிள்ளையோ
சூம்பிய மார்பை உறிஞ்சிச் சோர-கந்தையோ
மானத்தைக் காப்பேனோ பழிப்பேனோ எனப் புலம்ப
கண்ணீரில் முகம் கழுவி, தண்ணீரால் பசி அடக்கும் ஏழைகள்

விடியல் இல்லா இருளில் குருடரான ஏழைகள்
செல்வர் உலாவரும் பாதையில்-
விடியல் காண இரந்து நின்றோம்
வறுமை இருள் போகும் என நம்பி நின்றோம்

துள்ளிசை ஒலிக்க -மெல்லிடைகள் நெளிய
ஐந்து நட்சத்திர விடுதிகளில், அறுசுவை உண்டிகளோடு
-உங்கள் வறுமை ஒழிப்பு மாநாடுகள்

பசியின் இசையோடும், ஈர விழிகளோடும்
நீர் உண்டு பசியை வென்று
வசந்தம் வரும் என்ற நம்பிக்கையோடு.
விடிவு வரும் வழி பார்த்து நின்றோம்

பசிவர வில்லைகளும், பாதி முழுத்துணி-நாகரீகமும்
உண்டு பருத்த உடல் மெலிந்திட மருந்துகளும்
ஒன்றாய்க் கூடி நடத்தும்"வறுமை ஒழிப்பு மாநாடு"
சுரண்டி எடுத்த செல்வத்தால் நடந்திடும் கூப்பாடு

விந்தைகள் நிறைந்த வாழ்வில் வெளிச்சம் தேடி-
உங்கள் விருந்துகளில் எஞ்சியதை நாடி வந்தால்,
அரை குறை ஆடையில் நங்கையர், போதையால்
சிவந்த விழிகளிளோ காமக்கங்கைகள்.

நாம் இரப்பதற்கும், நீங்கள் ஈவதற்கும் ஏதுமில்லை
" வரமாய்" வாழும் வாழ்கையில்
"சாபமாய்" செல்வர் பிச்சை தேவையில்லை என்றே
வந்தவழியே திரும்பிடும் மானமுள்ள ஏழைகள் நாம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-10-2023

பாதையும் பயணமும்

பாதை வேறாயினும் பயணம் ஒன்றே எனும் மதங்களும்
பிரிவினையின் சின்னமாக, சட்டமும், நீதியும் ஏட்டில் உறங்க
இன, மத, மொழி வெறி-எரிமலையாய் மனங்களை
எரித்தே விழிக்க நடந்து முடிந்த முப்பதாண்டுகால யுத்தம்
கங்கையாய் ஓடிய மனித இரத்தம்.

ஆயிரமாயிரம் உயிர்கள் மாய, பல்லாயிரம்
அகதிகளாய் நாடு விட்டோட, எரியும் டயர்கள்
எரி நரகயாய் மாற, இனவாதம், பயங்கரவாதம்,
விடுதலைப் போராட்டம் என நடந்து முடிந்த யுத்தம்

காணாமல் போனவர்க்காய்- கண்ணீர்
தவமியற்றும் தாய்குலம்
கஞ்சிக்கும், கூழிற்கும் அல்லாடும்
இளம் விதவையினம்-

விடியல் தேடும் அங்கவீனப் போராளிகளும்
அகதிகளாய் புலம் பெயர்ந்தவர்களும்
அநாதைகளாய் தெருவில் நின்றவரும்
யுத்தத்தின் எச்சம்.

காடு மண்டிய ஊர்களும், கண்ணி வெடிக்காடாய்
மாறிய கழனிகளும் ஊனமுற்ற காலோடு உலாவும்
கால் நடைகளும். முறிந்த பனைகளும், சாய்ந்த தென்னைகளும்
மௌனராகம் பாடும் மீன்களும் ஓயாத சோகம் சொல்ல
விடுதலையின்றி அரசியல் கைதிகள் வாடிட
இனவத அரசியல் பேசும் -இன்றும்
இழிந்த அரசியல்வாதிகள்.

யுத்தம் ஓய்ந்து பன்னிரு ஆண்டுகள் கடந்தும் அழுகைச்
சத்தங்கள் ஓயவில்லை. மனக்காயங்கள் ஆறவில்லை.
நினைந்தழ தடையும் நீங்கவில்லை-நினைவேந்தலும்
புதிய போராட்டமான அவலநிலை

எங்கள் யாழில் பண்ணில்லை-கிழக்கில் பாடும் மீன்களும்
மௌனித்த நிலை, தாளம் மறந்த மேளங்கள்-சுருதி
குலைந்திட நாதஸ்வரங்களில் அபஸ்ஸ்ரங்கள்

மண்ணுக்குள் புதைந்து, கண்ணுக்குள் கசிந்து
நெஞ்சுக்குள் வாழும் சொந்தங்கள்
கனவாய் பழங்கதையாய் ஆனதே
நெஞ்சுக்கு நிம்மதி பொய்யாய் போனதே.

கனவுகள் மலருமுன் கருகிய மொட்டுக்கள்-
அந்திக்கு முன் உதிர்ந்த வண்ண மலர்கள்
இருள் பூத்த வானில் உதயமில்லை
இதயத்தில் எந்த நம்பிக்கை நட்சத்திரமுமில்லை

எங்கள் கண்ணீரில் ஏழ் கடலின் உப்பு
எம்மவர் செந்நீரால் இம் மண்ணும் சிவப்பு
ஆலா வட்டமிட்ட வானில்
பிணந்தின்னி கழுகுகளின் ஆரவாரம்
அலைமோதும் கடலோரம்
அலை ஒதுங்கும் பிணங்களின் துர்நாற்றம்

மலர்களுக்கும் வாழ்நாள் இருக்க
இளைய தலைமுறையின் வாழ்விற்கு
அகால மரணம் காலன் விதியானதே?

மனிதப் புதைகுழிகளும், மாவீரர் துயிலுமிடங்களும் பாழ்பட
வீழ்ந்த இராணுவத்திற்கு வெற்றித் தூபி எழுப்பி
விழா எடுக்கும் சிங்களத்தேசியம்.
வீழ்ந்த சொந்தங்களுக்கும், போராளிகளுக்கும்
தியாகச் சுடரேற்றி அழ
நினைவேந்தலும் தடையான அவலம்.

மறைந்தவைக்காய் நாளும் அழுது
மனதில் சோகத்தை அடைகாத்து
கண்ணீர் மழைக்காலமாய் வாழ்வு மாறிட
ஈழத் தமிழன் வாழ்வு!

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-1.3.2021

பாதி முல்லை

பள்ளிச்சீருடையிலும் பாலியல் வன்முறைக்கு
பலியான இரத்தகறைகள்:
கடற்படையின் வெள்ளைச்சீருடையிலும்
காமத்தின் பாவக்கறைகள்.

பள்ளி சென்ற பாதிமுல்லை-பரிதவிக்க
புழுதியில் கிடந்தது கடற்படையின் வல்லாங்கால்:
பாடித்திரிந்த வானம்பாடியும் உயிர் துடிக்க
பாதையில் விழுந்தது பருந்துகளின் வல்லுறவால்:

கசக்கி முகர்ந்த ரோஜாமொட்டு கண்ணீரில் மிதக்க,
அடக்கி ஆளும் ஆயுதவர்க்கத்தின் விறைத்த குறிகளோ
கன்னி யோனிகளை குறிபார்க்க
காமப் பேய்களாய் அலையும் சிங்கள இராணுவம்
தாய்குலமே கவனம்
தங்கச்சிறுமிகளே அதி கவனம்

இங்கு
வேலிகளே பயிர்களை மேய்ந்த அவலம்
வெருளிகளே-வல்லூறுகளாய் மாறி
பயிரைச் சீரழித்த துயரம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-04-2023

பத்தினி-ஐந்தாம் வர்ணம்

கொண்டவனின் காமம் தீர்க்க-குஷ்டரோகி
மௌத்தகல்யரிஷியைக் கூடையில் சுமந்ததால்
நளாயினியும் பத்தினியோ?

கொண்டவளிடம் காணாத சுகத்தை-கண்டவள்
மாதவியிடம்-கண்டவன்-கைப்பொருளிழந்து வந்தபோது-
காற்சிலம்பை கொடுத்ததால்-கோவலன்
பார்வையில் கண்ணகி கற்புக்கரசியோ?

சூதாடித் தோற்ற பொருள் அவை நடுவே
ஆடையிழந்து மானமிழக்கும் நிலையில்
நீதிகேட்டு வாதாடித் தோற்றது
நூலறுந்த காற்றாடியாய் அல்லாடித் தவித்தது

ஐவருக்கு மனைவியாகியும் அறவழி நின்றவள்
அறம் பிறழ்ந்த அவை நடுவே
அம்மணமாய் நிற்க பணித்த அநீதியை-கணவர்
ஐவரும் பேடிகளாய்ப் பார்த்திருந்தார்.
“பத்தினி” இவளை “பரமாத்மா” காப்பார் என்றா?

பத்துக் கைகளிருந்தும் பலனில்லாத நிலையில்
சேலை பற்றிய தன் கையை விட்ட பாஞ்சாலி
மானம் காத்திடக் கண்ணனைக் கதறியழைத்த பத்தினி

பெண் மானம் காக்காத-தன்மானம்
இல்லாத பேடிகளுக்கு மாலையிட்டதால்
பாஞ்சாலி இவளும் பத்தினியோ?

குருட்டு மன்னனுக்காய், கண்களைக் கட்டி
குருடியாய் வாழ்ந்த காந்தாரி பத்தினி
ஆணாதிக்கத்தின் ஏமாளி

பூச்சூடி மகிழ்ந்த சீதையும்-சிறை மீண்டபோது
தீச்சூடி வா என தீர்ப்பளித்தே-ஸ்ரீராமன்
பத்தினி சீதை எனப் பறைசாற்றினான்-
மனைவியாய்க் கரம் பற்றினான்.

வண்ணாண் வார்த்தையால் கலங்கிய ஸ்ரீராமனும்
வெள்ளை மனம் படைத்த கர்ப்பிணிச் சீதையை
கானகம் அனுப்பியது- ராஜா ராமனின் நீதியா?
சீதா ராமனின் அநீதியா?

படை, குடை. கோல் இருந்தால் இராவணன் சீதையைக் கடத்தலாம்
தசரதனும், கிருஷ்ணனும் பல்லாயிரம் மனைவியர் கொள்ளலாம்
இந்திரனும், சந்திரனும் விபச்சாரம் செய்யலாம்
காமபோக வாழ்வை யயாதியாய் சுகிர்க்கலாம்

காமத்துப்பாலின் இன் சுவையை நாளும் சுவைக்கவோ
“கடவுளரும், மனிதரும்” பல தாரம் கொண்டார்?
கற்பெனும் விலங்கு மனையாளுக்கே என்றார்

சாத்திரங்களும், உபதேசங்களும்
பெண்ணடிமைத்தனத்தின் பேடிக் கோலங்களோ?
மனுதர்மத்தில்-சூத்திரனுக்குக் கிழே ஐந்தாம் வர்ணமாய்-
அ.:.றிணையாய் போகவர்ணமாய் பெண்மையோ?

ஆண்மையில்லாக் கணவனுக்காய்-மலடியாகிறாள்
ஆவிபோன கணவனுக்காய்-ஆயுள் முழுவதும் விதவையாகிறாள்
குடும்பத்தில் தாயிவளோ சம்பளமில்லாத வேலைகாரி
கூடி மகிழ கணவன் வேண்டும்பொழுதெல்லாம்
காசு கேட்காத இலவச விபச்சாரி

தவம் குலைக்கும் மோகன சுந்தரிகளாய்
தேவர்களும் சுகம் கானும் காமசுந்தரிகளாய்
தேவலோகத்து அப்ஸரசுக்கள்.

மனைவியர் சோரம் போகமலிருக்க
கற்பு என்னும் “விலங்கை”-“அணிகலனாய்” மாட்டி
“கணவனே கண்கண்ட தெய்வம்” “மந்திரம்” ஓதி
பத்தினி- கற்புக்கரசி என்னும் பட்டங்கள் கொடுத்து
வாழ்த்தியும் சாபமிட்டு மிரட்டியும் ஆட்டி வைத்த ஆணினம்

ஆணாதிக்க சமூகமும் சமயமும் சிறை வைத்த பெண்மை
தாய்மையோ கடவுளுக்கு நிகரான மேன்மை

(அ)சோகவனத்தில் அழுது வாடிய பெண்மை
ஸ்ரீராமனால் வனம்போன தாய்மை

இராவணண் சிறையெடுக்கவும்-இராமன் வனமனுப்பவும்
பந்தயபொருளாய் தர்மன் சூதாடித் தோற்கவும்
துச்சாதனன் துகிலுரியவும் துன்புற்ற பெண்மை

கண்ணகியாய்-மாதவிாய்-மணிமேகலையாய்
குண்டலகேசியாய்-தமயந்தியாய்
இன்றும் நம் தாயாய். சகோதரியாய்- மனைவியாய்
கண்ணீர் சிந்தும் பெண்மையோ தெய்வம்

அணங்கையும் ஆசையின் வடிவமாய் கண்டதாலா
ஆடவர் மண் பொன் என்ற சடப்பொருள் வரிசையில்
உயிர்ப்பொருளான பெண்ணையும் சடப்பொருளாக்கி
உயர் திணையையும் அஃறினையாய் மாற்றி
தாய்மையைப் பழித்தார்?

பொன், பொருளோடு சுகம் தந்தாள்-தாரம்
பொருள் கொடுத்து கூடினாள் விபச்சாரம்
தரங்கெட்ட மனித உலகு

வல்லாங்கு செய்யும் கணவனுக்கு எதிராய்
வாய் திறவாத ஊமையும்-பத்தினி

“கற்பென்பது பெண்களுக்கே” என்று விதி வகுத்தவர்-
உடன் கட்டை ஏற வழி சமைத்தவர்-தாரம் மடிந்திட
தாமோ மீண்டும் மணமேடை அமர்ந்திட விதிகள்
பால்ய விதவைகளுக்கு மகாத்மா வரும்வரை
மறுவிவாகம் செய்ய முடியாத சதிகள்

காமம் அறிந்து கழித்த மனமோ சூனியம்
கஜீராகோ கோயிலின் மகத்துவம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-04-2023

பட்ட மரம்

காதல் மழையின்றி-அன்பே
உன் கங்கையும் வற்றிப்போனது.
நீ சூடாமல் உன் காதல் ரோஜாவும்
வாடியே உதிர்ந்துபோனது.

அமுதைப் பொழிந்த ஆனந்த நிலவும்
அல்லி மலர் காணாமல் தேய்ந்து
அமாவாசையிருளில் மறைந்துபோனது.

என் நெஞ்சில் நீ ஏற்றிய-
காதல் தீபமும்-காதல் நெய்யின்றி
அணையும் நிலைக்கானது.

முக்கனியாய், முத்தமிழாய் இனித்த காதலுக்கு
கண்பட்டதோ? பூ நெஞ்சமும் புண்பட்டதோ
பட்டமரமாய் நான் வாடி,
ஒற்றைகுயிலாய் மனம் கூவ அன்பே நீ எங்கே?

கலாப மயிலோ, கண்ணீர் மழையில் ஆடி
கோல மயிலை அழைத்துக் களைத்திட,
வண்ண மயிலோ எட்டாத் தொலைவில்
அகவித் துடித்திட காதல் போயின் சாதலே.

காதல் தீய்க்கும் நெஞ்சும் காட்டுத்தீ பற்றிய பூவனமோ?
கண்ணீர் தேங்கிய காதல் நெஞ்சும் சாக்கடலோ?
காதல், காதல் . காதல்-காதல் போயின்
சாதல், சாதல் சாதல் தானோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-10-2023

பயணம்

மெல்ல எழுந்து,நெளிந்து வளைந்து-வளையங்களாய்,
வட்டங்களாய் உருமாறி, அலை அலையாய்த் தொடர்ந்து
காணாத காற்றின் கரங்களைப் பிடித்து, அந்தரத்தில் நடந்து
நாட்டியமாடி, பூங்கொடிபோல் வளர்ந்து உயரும் அழகு

பிறப்பிடம் அறுத்து, தென்றலில் மெல்ல கலைந்து
தன் இருப்பை அழித்து சுடரின் தொடர்பின்றி
இருப்பில் கரையும்-புகையின் நாட்டியத்தில்-எத்தனை
எத்தனை அபிநயங்கள்?

அந்தரத்தில் சுந்தரமாய் நடனமாடி
தன் சுயமழியும் அழகை சுதந்திரம் என்றே
போற்றிப் பறைசாற்றிக் கொண்டாடும் பொழுதது

காற்றின் அசைவில், இசைந்து கைகோர்த்து நடனமாடி
தன்னையே அழிக்கும் ஊழிக்கூத்தான நடனம்
சிவசக்தியின் கூத்தல்ல

வேகும் வெண்சுருட்டில் புகையாய் பிறந்து
காற்றில் எழுந்து-வெளியில் மறையும்
வாசப் புகையில் அழகிய கலைவடிவு?

அந்தரத்தில் ஆடும் அழகிலும், எதுவும் நிரந்தரமல்ல
என மொழியும் கவியழகு, கலையும் புகையும் அழகு.
புகைத்தல் வாழ்வும் மாயையான உறவு
புற்று நோயில் மானுட அழிவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14.8.2023

பிரபஞ்சக் கோலங்கள்

பிரபஞ்சம் போடும் அழகுக்கோலங்களில்-
புள்ளி வைத்து, புழுதியால்-புழுதியில்-போடும்
மானுடக்கோலம் இறைசாயலானது?

அன்னை தந்தை-கணவன் மனைவி, பிள்ளை குட்டி-
சொந்த பந்தம்-உறவு பகை, கோலங்களில் அழகுமுண்டு-
நம்மால் அலங்கோலமாவதுமுண்டு

காலம் ஒரு பொருட்டல்ல, காத்திருப்பும் பொருட்டல்ல
ஆணவம் கழித்தலே நிலை வாழ்வு-நாளும்
கலைந்தும் கலையாமலும் வடிவங்கள் மாறிட
ஜனனம்-மரணம் புதிய பரிமானங்கள்-பரிணாமங்கள்

உறவாய்- பிரிவாய்-வரவாய் செலவாய், இணைப்பாய்- பிரிப்பாய்-
காலம் தோன்றாக் காலம் முதல், பிரபஞ்சம் போடும் கோலங்களில்
எத்தனை வடிவங்கள்? வாழ்ந்து காலம் பல கழிந்திட-வாழ்வு
கோலமானதா? அலங்கோலமானதா? தவமாய் எண்ணிப்பார்கின்றேன்

பொன்மானை தேடிய-ராமனாய் உலகில் அலைந்து
ஊதாரி மகனாய் ஞானம் பெற்று
வீடு திரும்பும் பயணம் எல்லாம் ஞானப் பயணமோ?

தோல்விகளும்-பிரிவுகளும், சோகச் சுனாமியாய் அழித்த
நிகழ்வுகளும், வாழ்வின் திசையை மாற்றிட,-அமைதி தேடி
அறிவைக் கழித்து, ஆன்மீகத் தேடலாய் உள்நோக்கி மாறிட்ட
உன்னத பயணமாய் மாறிட்ட வாழ்வு

நரை பூத்து, நகரும் காலம் சொல்ல, முதுமை பூசி
இள மெய்யும் தடுமாற-விழி மங்கி வில்லைகள் அணிந்து
மருந்துண்டு, பத்தியம் காத்து, மரணம் நோக்கிய
பயணியின் காத்திருத்தலாய் வாழ்வு?

வார்த்தைகள் கடந்த வாழ்ந்தறியும் அனுபவமே உண்மை
வாழ்வு தேடலாக, விழிப்போடிருக்க-தூங்கவிடாமல்
துரத்தும் தோல்விகள்-வரங்களே, தோல்விகளைத் தாங்கி
தொடரும் வாழ்வு மெய் தவமே

பிரபஞ்ச வித்தாய் நாம், பிரபஞ்சத்தின் கூறாய் நாம்
பிரபஞ்சமாய் நாம், அறிந்தால் சாவில்லை-வாழ்வே

சடமும்- சக்தியும் , இயக்கசக்தியும்- நிலைச்சக்தியுமாய்
ஆடிடும் சிவசக்தி நடனம்-பிரபஞ்சம்- எரிந்தும், எரியாத முட்செடியின்
அரிய தத்துவம், இறப்பூ ஒரு தூக்கம்-பிறப்பூ- ஒரு விழிப்பு
இறப்பூ- பிறப்பூ இணைந்த மலர்தலே வாழ்வு

சுற்றும் கோளங்கள்,நீள் வட்டப் பாதையில் சுழன்றாட
சச்சித்தானந்தமாய், சிவசக்தி ஆனந்த தாண்டவமாட
வாழ்வு-பிரபஞ்சத்தின் ஆனந்த கூத்தே

ஆனந்தமாய் ஆடி முடித்தவர், அவதார புருஷரானார்
கனவு வளர்த்து-ஆசை சங்கிலி பிணைத்து-ஆடிக் களைத்தவர்
பாதியில் ஆட்டத்தை நிறுத்தியவர், மீண்டும் ஆடி
ஆட்டத்தை முடித்திட தொடர்ந்தும் பிறப்பெடுத்தார்.

பெண் இன்பம் தேடிய மன்னன் யயாதி-சலித்தே மனம் மாறினான்
மண் இன்பம் தேடிய மகா அலெக்ஸாண்டர் பாதி வழியில்
பயணத்தை முடித்தான், பொன், மண், பெண் இன்பம் துறந்த-
சித்தார்த்தன், தன்னை அறிந்து கௌதம புத்தரானார்

முள்முடி சூடி, மன்னன் எனக் கேலி செய்தவரோ
கல்வாரிச் சிலுவையில் இறை மகனாய் உருமாறினார்
அவதார புருஷர்களோ-பிறப்பறுக்க பிறந்து வழி காட்டினார்
பிரபஞ்சத்தில் ஒன்றாகிப் பிரபஞ்சமானார்.

இருளில் எண்ணில்லாச் சந்திர-சூரிய நட்சத்திரங்கள்
எல்லையில்லா அண்டவெளியில் ஒளிர்ந்து பிரகாசிக்கின்றன,
இருளில்தான ஒளியின் அழகு புரியும், அறிந்திட
விழிப்புணர்வு வேண்டும், வாழ்வு முரண்பாடுகளின் இணைப்பாக
இருமையின் உறவாக வியப்பூட்டும் பிரபஞ்சம்

என் உள்ளும், வெளியுமாய் எங்கும் பிரபஞ்சம்,
எண்ணி வியந்து போகின்றேன், விரியும் பிரபஞ்சமாய் பிரம்மம்
வாழ்வு லீலை என்பது வாழப், மெல்லப் புரிகின்றது.

பிரபஞ்சம் தன் இரகசியங்களை மறைப்பதில்லை-சித்
தன் இரகசியங்களை-சத்தாய் வேதமாய் உபதேசிக்கின்றது.-
வாழ்வில் புரிந்தது பாதி- புரியாதது மீதி
புரிந்தவன் ஞானி-புரியாதவன் அஞ்ஞானி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14.8.2023

பிரிவு

சொல்லாமல் போய் விட்டாய் நண்பா
சோகம் தாளாமல் நான் துடிக்கின்றேன்
கல்லான தெய்வங்கள் எல்லாம்
ஶ்ரீராமன் கால்படக் காத்திருக்க
கனிவுள்ள தெய்வத்தைத் தேடுகின்றேன்
உன்னுயிரை திரும்பக் கொண்டுவர

பட்டகடன்

பட்ட கடன் என்றார் தந்தை
சுட்ட பானை உடைந்த கதையென்றாள்-அன்னை
முந்திப் பழமுண்ட பறவையின் கதையென்றாள் தங்கை
ஒட்டி ஒரு நதி மிதந்தகட்டையென்றாள் மனைவி

விதி என்றான்- மதி நோக்குகையில்
மானுடர் செல்லும் வழி என்றான்
வருத்தம் ஏனென்றான்
பார்த்தனும் சாரதியும் பரிதவிக்க
பறிகொடுத்த பிள்ளை வழியென்றான்
படுத்தவன் எழுந்து.

சீதனம்

சீதனத்திற்காய்-காதலன்-யூதாஸாய் மாறி
காதலைக் காட்டிக் கொடுத்திட
காதலிகளோ காலமெல்லாம்- முதுகன்னிகளாய்.
சோகச்சிலுவையில் தொங்கிக் கிடந்தார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-10-2023

பொன் விளையும் பூமி

அன்று

காணுமிடமெல்லாம் பசுமையின் ஆட்சி,
கழனிகள் எங்கும்-பொற்கதிர்களின் மாட்சி
பொன்விளையும் பூமியெங்கும்
புள்ளினத்தின் இசைக்கோலம்,-நாளும்
மதுமலரில் திளைத்து இசைமழையில் ஆடிடும்
வண்ணத்துப் பூச்சிகளின் நடன அரங்கேற்றம்.

காடான், கிளி, புறா,நெற்குருவி, சில்லித்தாரா, கொக்கு,
தூக்கணாம் குருவி என உண்டு களித்த பறவைக் கூட்டம்
கண்டு மகிழ கானம் பாடும்-வண்டு சுவைத்த பூவினங்கள்
எந்நாளும் வசந்தமென்றே வற்றாது தேன் சுரக்கும்.

சேதனப்பசளைகளால் செழிப்பான மண்ணை
உண்டு, உழுது மகிழும் மண்புழுக்கள்-பூமிக்கு
உயிர்காற்றை வழங்கி செழுமை கூட்டும்
அமுதெடுத்த தேனீக்கள் அழகாய்க் கூடுகட்டி
பசுமைக்குச் சான்று பகிரும்.

களத்து மேடெங்கும்
காதல் குருவிகளின் கொண்டாட்டம்
காமன் தோட்டத்தில்
காடான் குருவிகளின் கவிதை அரங்கேற்றம்.

இன்று

சேதனப் பசளைகளால் செழித்த பூமி
இரசாயனப் பசளைகளாலும், கிருமி நாசினிகளாலும்
களை கொல்லிகளாலும் மெல்லச் செத்திடும் சாமி

மண்ணைச் சுட்ட இரசாயனங்கள்
மலர்களின் வேர்களை சுட்டிட,
மண்புழுக்களின் வாழிடத்தை சுடுகாடாக்கிட
பூக்களும், புழுக்களும்
ஒன்றாய் மாளும் அவலமிங்கு.

மண்ணே நஞ்சாகிட -மண்ணில் இனம் பெருக்கி
வளம் கூட்டி வாழ்ந்த மண்புழுக்கள்
கொத்துக் கொத்தாய் மண் மேல் செத்து கிடந்து
எதிர்ப்பைக் காட்டிட.-இல்லிடமே இடுகாடான அவலம்.

மண்ணைக் கீறித் தூவிடும் விதைகளை
பொன்னாக்கும் பூமித்தாயிவள் -பொல்லாத
இரசாயனங்களின் அதீத பாவனையால்
புண்ணாகிப்போனாள்

களை மூடிய கழனிகள் வனப்பிழந்து வாடிக்கிடந்திட
வயல்வெளிப் பூக்களும் மொட்டிலே கருகி உதிர்ந்திட
மதுவுண்ணும் தேனினம்-அமுதின்றி
பூக்களை தேடிக் களைத்தே வாடி மெலிந்தது.

நஞ்சான புழுக்களை- நல்விருந்தென்றே உண்ட குருவிகளில்-
செத்தவை போக மலடானவற்றால்
குலம்பெருகிட வழியின்றி இனம் அருகிட
குருவிகளின் இசைக்கோலம் என்றோ கேட்ட ஒன்றானது.

பூமித்தாய்க்கு மனிதன் செய்யும் கர்பச்சிதைவுகளாய்,
பொன்முட்டையிடும் வாத்தை கீறிப் பார்க்கும்
பேராசையின் வடிவங்களாய்
இரசாயனப் பசளைகளும் களைநாசினிகளும்?.

அதிக விளைச்சலுக்காய் தாய்மையைச் சூறையாடுகின்றார்:
தாய்ப் பாலை வியாபாரமாக்கிட-அரக்கர்
அன்னையின் மார்பையே கசக்கிப் பிழிகின்றார்

ஊனும் உதிரமும் நஞ்சாகிட- இளமையிலே
"மருத நிலப் பருவமங்கை மலடியான கொடுமை
பாலையாகும் சிறுமை"

செயற்கை உரங்களால், நச்சு இரசாயனங்களால்
ஊறிவந்த நீரூற்றுகளும் ஓய்ந்து போயிட,
பால் வற்றிய மார்போடும் கருப்பை புற்றுநோயோடும்
பூமித்தாயிவள் நலிந்து வாடுகின்றாள்?

பச்சை வீட்டு வாயுக்களால் ஓசோன் மண்டலத்தில்
பெருகிடும் ஓட்டைகள்-புவி வெப்பமடைந்திட
உருகும் துருவப் பனியால் உயரும் கடல் மட்டங்கள்

கடல் தாயின் கருப்பையையே
கழிவறையாக்கி-கதிர்வீச்சுக் கழிவுகளை
சேமிக்கும் கொடும் திட்டங்கள்.

பச்சை வயற்காடெல்லாம் பாழாய்ப் போயிட
கிள்ளை மொழியும் சிட்டு குருவிகளின்,
காடான், தூக்கணம் குருவிகளின் இசைக்கோலங்களும்
வயல் வெளிகளில் மௌனித்துப்போனது.

பூக்கள் இல்லாத காட்டில் வண்ணத்துப்பூச்சிகளின்
இருப்புப் பொய்யானது-களைமண்டிய வயல்கள்
அரவங்களின் குடியிருப்பாகிட-காடுமண்டிய பூமியில்
நாளும் தோன்றும் கறையான் புற்றுக்கள்

ஒன்று கூடி உண்டு குதூகலித்த பறவைகளும்,-வண்டுகளின்
காதல் ரீங்காரத்தில் வெட்கிச் சிவந்த தேன்மலர்களும்,
நாளும் போடும் இசைக்கோலங்களும்,
வண்ண மலர்கோலங்களும் பொய்யாய், கனவாய்,
பழங்கதையாய் போன கொடுமையிங்கு.

இரசாயனங்களின் பாவனையால் மண்ணும்
விளையும் பயிர்களும் நஞ்சாகிட-புற்றுநோயும்
சிறுநீரக நோயும் மனிதனை வாட்டும் துயரம்

பூக்களின்றிப் புள்ளினமின்றி காடாகிப்போன வயற்காட்டில்
நாளும் நடக்கும் நிகழ்வாக காடான் குருவி ஒன்று
தன் துணையைத் தேடி கூவிக் கரைகின்றது, கேவியழுகின்றது
பின் வாடிய உள்ளத்தோடு சோகக் கவிபாடி எழுந்து பறக்கின்றது

உழுதுண்டு வாழ்வார் வாழ்வில் பழுதென்று குறை சொல்லி
வள்ளுவரும் வருந்திப் பாடும் நிலை வந்ததே ?
பிடி அன்னத்திற்கு உழவர்-கையேந்தும்
இழி நிலை வந்ததே- கண்களில் ஈரம் பொங்குதே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-04-2023

போதை வஸ்து

குருத்துக்களை அழிக்கும் கோர வண்டுகள்
மொட்டுக்களை கத்தரிக்கும் வெட்டுக்கிளிகள்
இளம் பயிர்களை கருக்கும் அறக்கொட்டிகள்
தேசத்தின் இளைய தலைமுறையை தீய்க்கும்
போதை வஸ்துக்கள்

பாடசாலை வாயில்களிலும்-விளையாட்டு
மைதானங்களிலும்-விலைபோகும்
பரவசமூட்டும் பானங்கள்

கஞ்சா-ஹிரோயின்-மர்ஷீவானா, மெதனோல், ஐஸ்
என நாளாந்தம் பிடிபடும் போதைப் பொருட்களால்
நாறிப்போகுது தேசம் நடுங்கி வாடுது பெற்றபாசம்

கல்லான புத்தர்பெருமானும் கண் மூடித் தியானிக்க,
கைவிரித்து இயேசுவும் சிலுவையில் தொங்கி நிற்க,
அல்லாவும் அருவமாய் மறைந்திட
தும்பிக்கை விநாயகனோ நம்பிக்கையின்றி நலிந்திருக்க,
முக்கண்ணனும் மூன்றாம் கண்ணை மூடித் துயில,
அனந்த சயனனோ ஆழ்ந்த நித்திரையில்
-இது தான் கலிகாலமோ?

ஓ புருஷோத்மனே! ஒலிக்கட்டும் உன் பாஞ்சஜன்யம்
மீண்டும் ஒரு குருஷேத்திரம் இங்கே தொடங்கட்டும்
அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டிட
அருச்சுனா காண்டீபத்தை ஏந்தடா-தேவத்தை முழங்கடா

வீமா பௌண்டரத்தை ஒலிக்கச் செய்
கௌரவ சேனை நடுங்கட்டும்
போதை வஸ்துக்களும், கஸினோக்களும்
மதுபானசாலைகளும் அழிந்தொழிய
கஞ்சா காடுகள் தீப்பற்றி எரிய
கயவர்களை அழித்து புது யுகம் தொடங்க
புது குருஷேத்திர யுத்தம் தொடங்கட்டும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-04-2023

புரட்சிப் பெண்

சோகம் பூகம்பமாய் உன் ஆணிவேரை அசைக்கும் போதும்,
புயலாய் உன்னை நிலை குலையச் செய்யும் போதும்
இடி, மின்னல், மழை, பெருவெள்ளமாய் உன்னைத் தாக்கிட
எழும்போதும்- பெண்மையே எழுந்து நில்.

விழுவதெல்லாம் மறுபடியும் எழுவதற்கான
மண்ணின் முத்தங்களே-மரணமெல்லாம்
மறுபடியும் முளைப்பதற்கான புதிய விதைப்புக்களே.

எங்கு பெண்மைக்கெதிராய் அநீதி நடந்தாலும்
கண்ணகிகளே, காற்சிலம்பை உடைத்து
நீதி கேளுங்கள்-அவிழ்ந்தகூந்தலில்
திரௌபதிகளே, துச்சாதனன் குருதி தடவி
முடிந்திடச் சபதம் இடுங்கள்.

நீதி மறுக்கும் ஆண் வர்க்கம் பீதி கொள்ளட்டும்
ஆணும், பெண்ணும் சமனென்ற நீதி
அவனியெங்கும் நிலவெட்டும்

தீக்குளித்து வா என்றால் ஸ்ரீராமனையும் சீதைகளே
உதறித் தள்ளுங்கள்-மாதவியிடம் மயங்கிய கோவலனை
கண்ணகியே விலக்கி வையுங்கள்-கற்பு கணவருக்கும் மானமே

நளாயினிகளே தாலியை அறுத்து புது வாழ்வு
தேடுங்கள்-அகலிகையே அண்ணகன்
கணவன் என்றால் விவாகரத்துக் கோருங்கள்

பாஞ்சாலியே, ஒருவனுக்கு ஒருத்தி என்று குந்திக்குப்
பாடம் புகட்டு-காந்தாரியே கண்கட்டை அவிழ்த்து-
பீஷ்மனை நெற்றிக் கண்ணால் சுட்டுத் தள்ளு

சூதாடி தருமன் என்றால் சுந்தரி திரௌபதி
அவனை தீர்த்துக்கட்டு, பெண் ஒன்றும் பகடைக் காய்
அல்ல நிரூபித்துக்காட்டு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-10-2023

தர்மம்



என்றுமுள்ள தர்மம், என்றும் மாறாத சனாதன தர்மம்,
மனுஸ்மிருதியின் சாதியத்தால் மானுடத்தை பிளவுபடுத்திய
அதர்மம், பெருங்கோயில்களில் சமஸ்கிருதத்தால்
சாஸ்திரம் ஓதி, ஆளும் பார்பனிய வர்க்கம்

புராணப் பொய்களால் மனுதர்மத்தை நீதியாக்கி,
ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகளாய் வாழும் இனம்
பகுத்தறிவே வாழும் தர்மம் முழங்கிடும் திராவிடம்
சூத்திரராய், திராவிடரைச் சித்தரிக்கும் இழிந்த குணம்

வருணாச்சிரமத்தால் முடி சூடிய பிராமாணியம்
க்ஷத்திரிய, வைசிய, சூத்திர புத்திரர்களாய்
மானுடத்தை வகைப்படுத்தி, பஞ்சமர்களை
தீண்டாத்தகாதவர்களாக்கி வளர்ந்த அதர்மம்

பார்ப்பனியம் கூறிடும் புராணப் பொய்களை
பகுத்தறிவால் ஆய்ந்து பார், உண்மையை நீ அறிவாய்
வேதங்களில் வார்த்தைக் குப்பைகள் தவிர,
வேறு ஏதுமில்லை புத்தர் பெருமானின் முழக்கம்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்
செய்யும் தொழிலே தெய்வம், யாம் பெற்ற
இன்பம் பெறுக இவ்வையகம் என்ற தமிழன்
சாதியம் கடந்த சான்றோன்

பசுவோ பஞ்சகவ்வியம் தரும் பதுமநிதி,
பஞ்சமரோ தீண்டத் தகாத சங்கதி
சமஸ்கிருதமோ தேவ பாஷை-தீந்தமிழோ
நீச பாஷை, சங்கராச்சாரியன் வாய்மொழி

பிரம்மனின் முடியில் பிறந்தவன் பார்பனன் எனப்
போற்றிடும் சனாதன தர்மம், இறையடியைப் போற்றிப் பாடி,
தலை வைத்து வணங்கு எனக் கூறி, தலையிலும், இறையடி
புனிதம் என்ற புரட்சிக் கவிஞன் வள்ளுவன் தமிழனடி

உன்னைப்போல் உன் அயலவனை நேசி
நம்மில் பேதங்கள் இல்லை, இறை மக்கள் நாம்
என்ற ஆன்மீக அகக்கிளர்ச்சியாளர்-திருச்சட்டத்தை
அன்பால் புடமிட்ட மனுமகன் இயேசு

அன்பின் மொழியே இறைமொழி, மொழிகளுக்கிடையே
பேதங்கள் இல்லை, மழலையின் மொழி தாய்க்குப் புரியும்
பக்தனின் மொழி அன்பு இறைவனுக்குத் தெரியும், தேவ மொழி,
நீஷ மொழி சனாதன பூசாரிகளின் வேசித்தனமடி

தமிழுக்கு அமுதென்று பெயர்-இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
உலகின் மூத்த குடி பேசிய முத்தமிழ்
என்றும் இளமை மாறாத கன்னித் தமிழ்


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-11-2023

சாக்கடையில் பூத்த சந்தன மலர்கள்



நாளும் மலம் அள்ளி, நாறும் சாக்கடைக் கழிவகற்றி
சந்தனமாய் ஊர் மணக்க, சாதியத்தால் நாம் நாறி மணக்க
ஆற்றோரம் எங்கள் சேரி, அந்திமாலையில்
கள்ளின் போதையில் அரங்கேறும் எம் கவலைக் கச்சேரி

சூத்திரன், சக்கிலியன என்று பழித்துப், பறைநாய்களும்
ஒதுக்காத எம்மை-சாதியத்தால் ஒதுக்கிய வல்லுனர் நீங்கள்
ஒன்றே குலம் ஒருவனே தேவன்
எனும் சங்கத்தமிழர் வாரிசுகள்தானோ?



சாதியச் கிறையில் வாடும், ஆயுட்கால கைதிகள் எமக்கு
கல்வியோ, செய்தொழிலுக்கு ஏற்ற ஊழியமோ எட்டாக்கனி
தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா
சினிமாவில் ஒலிக்கும் வெறும் புரட்சித்தொனி

மலவண்டி வரும்போதெல்லாம்
மூக்கைப்பொத்தி முகஞ்சுழிக்கும் நீங்கள்
நாறுவது நம் மலசலம், நம் இனமோ தமிழினம்
என்பதை மறந்ததும் ஏனோ?

வேதியப் பொய்களால் வளர்ந்த சாதியம்-தலைமுறை
தலைமுறையாய் -ஏழைகள் எம்மைச் சுட்டெரிக்க-
வாழ்வாதாரத்திற்கு மலம் அள்ளிடத் தயங்காத -துப்பரவுத்
தொழிலாளிகள், இந்தியக் கூலிகள்? வேடிக்கை

நாளும் நாம் வராவிடில் வாளிக்கக்கூஸ் வீடுகள் நாறும்,
உங்கள் கழிவகற்ற நாமில்லையேல் ஊரே நாறும்-
கசப்பான உண்மையை அறிந்திருந்தும் உறங்குவதுபோல் நடிப்பு,
உங்கள் குருதியிலே மாறாத உயர் ஜாதித் துடிப்பு

அழுது, புலம்பிக் கதறியும் சாதியச் கொடுங்சூட்டின் வேதனை
உயர்குடி உங்கள் இதயத்தை தொட்டதுமில்லை-உயர் ஜாதி
ஆண்டவனை எட்டியதுமில்லை, மனிதநேய ஆண்டவனைத்
தேடியும் காணாத மனுஷி ஜாதி நாம் தீண்டாதார்?

வேதியம் வகுத்த வக்கிர நீதியில், சூத்திரருக்கு கோயிலோ,
தெய்வமோ இல்லை-கூலி தரும்போது -கூலிகளுக்கு
கும்பிடும் சாமியாய் நீங்கள்? சாக்கடையில் நாங்கள்-
படித்த மேட்டுக்குடி சாமிகளாய் வானத்தில் நீங்கள்

வாளிக்கக்கூஸ், குழிக்கக்கூஸீகளாய் மாறிட, ஊர் நடுவே இருந்த
எங்கள் சக்கிலியச் சேரி, ஊரழகிற்கு இழுக்கு என்றே-கலைத்து
ஊர் எல்லையில் எம்மை குடியேற்றி பட்ட கண்ணூறு கழிக்க-
ஆராத்தி எடுத்து கழித்த ***சாதிய எச்சிலாய் நாங்கள்***

கல்விச்செல்வமின்றி- காலமெல்லாம் நாம் கழிவகற்றி வாழ
நாமும் “பாராண்ட பேராண்மை தமிழரின் வாரிசுகள்”
என்ற உண்மையை - எண்ணவும் மறந்த ஈழத் தமிழர்களே
வாழ தமிழ் ஈழம் கேட்டு உங்கள் உரிமைப்போராட்டங்கள்?



எமக்காய் போரிட-எமக்கு யாருமில்லை-
எமக்காய் குரல் கொடுக்கத் தலைவனுமில்லை,
சாதியச் சிறையில் பல்லாண்டு வாழும் எமக்கு
விடுதலையும் பகல் கனவுதானோ?

செய்யும் தொழிலே தெய்வம் என்றால்-உங்கள் உயர்
ஜாதி தெய்வங்களும், சாதியம் பேசும்
வேதக்குப்பைகளும் எமக்குத் தேவைதானோ?

நாறிடும் உங்கள் மலசலத்தை நாளும் அள்ளி எறிந்த நாம்
சாதியம் பேசும், உங்கள் தெய்வங்களையும் வேதக்குப்பைகளையும்
எம் சமூகத்தை நாறடிக்கும் மலசலம் என்றே அள்ளி எறிந்தோம்
அன்பே தெய்வம் என்பதை அறிந்தும். புரிந்தும் வாழ்கின்றோம்

உயர்ஜாதி உங்களுக்கு சாதியம்-எந்நேரமும்
அபினியும். போதையுமாக, கள்ளும், மதுவுமே எம் போதை-
அதுவும் விடியலில் மறையும் மாயை

உங்கள் சாதிய மதவாதப்போதையோ சாகா வரம் பெற்ற பொய்மை
-காலாகாலமாய் ஏழை மானுடத்தை தீய்க்கும் கொடுமை
அறிவீரோ வேதியரே, சாதிய வெறியரே?-அறிந்தால்-அன்பினால்
இன்புற்றுப் புதிய சமத்துவ சமுதாயம் படைத்திட வாரிர்

நாறும் மும்மலங்களுக்குள்ளும் -நாறும் சாதியம்
அடங்காத மலமோ? சிவனடியார் நீறும் பசுவின் மலமே
கோமயத்திலும் கேவலமோ தீண்டாதான் ஜாதி ? இது என்ன நீதி?

யாதும் ஊரே யாவரும் கேளீர்!, ஒன்றே குலம், ஒருவனே தேவன்
விண்ணதிர , மண் நடுங்க முழங்கட்டும், எண்திசையும் கேட்கட்டும்
சாதியச் சங்கிலிகள் நொருங்கட்டும், தீண்டாமை தீய்ந்து கருகட்டும்.
ஒடுக்கப்பட்ட மானுடம் விடுதலையை சுவைக்கட்டும்
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 15-08-2023